வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 25.05.2022 புதன்கிழமை | இதழ் : 170 | பக்கங்கள் : 16

# மிகமோசமான நிலையை நாடு விரைவில் சந்திக்கும்



## எச்சரிக்கிறார் மத்திய வங்கி ஆளுநர்

- இறக்குமதி தடைப்படும் நிலைமை
- வேலையில்லாதோர் தொகை உயர்வு
- கட்சி பேதம் மறந்து செயலாற்றுங்கள்

கொழும்பு, மே 25

வரலாற்றில் இதுவரை பதிவாகாத மிகமோசமான பின்னடைவை நாடு எதிர்கொள்ள நேரிடும். அடுத்த மூன்று முதல் ஆறு மாதங்களில் எம்மால் சாதாரண இறக்குமதிகளை மேற்கொள்ள முடியாது என்று மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் விஜயசேகர தெரிவித்துள்ளார். 15



## எரிவாயு வழங்காமையால் யாழில் எதிர்ப்பு போராட்டம்!

யாழ்ப்பாணம், மே 25

எரிவாயு சிலிண்டர்கள் வழங்கப்படாமையால் யாழ்ப்பாணம் நகரம், திருநெல்வேலி சந்தி, பரமேஸ்வரா சந்தி பகுதிகளில் நேற்று மக்கள் போராட்டம் மற்றும் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள் ஊடாக எரிவாயு வழங்கப்படும் என்று முன் 15

### தமிழகத்தின் நன்கொடை;

## ஒரு குடும்பத்துக்கு தலா 10 கிலோ அரிசி

கொழும்பு, மே. 25

தமிழக அரசின் நன்கொடையில் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள அரிசி மற்றும் பால்மா என்பனவற்றை நேற்று மாலையிலிருந்து அனைத்து மாவட்டங்களுக்கும் அனுப்பும் செயன்முறை ஆரம்பமாகியுள்ளது. 15

## இந்தியாவுக்கு கச்சதீவை வழங்கும்நிலை ஏற்படாது

### அமைச்சர் டக்ளஸ் உறுதி

வவுனியா, மே 25

கச்சதீவை இந்தியாவுக்கு குத்தகைக்கு வழங்குவது தொடர்பாக உத்தியோகபூர்வ தகவல்கள் ஏதும் வழங்கப்படவில்லை. அந்த விடயம் அரசியலுக்காக பேசப்பட்ட விடயமோ தெரியாது. ஆனால், இது தொடர்பாக ஏதும் கலந்துரை 15

## 21இல் திருப்தியில்லை

### எதிர்க்கட்சி தலைவர்

கொழும்பு, மே 25

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை முற்றாக இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்திய எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டுள்ள 21 ஆவது திருத்தச் சட்ட வரைவு திருப்தியாக இல்லை என்றும் கூறியுள்ளார்.

நேற்று ஊடகங்களிடம் பேசிய அவர், "நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை ஒழிப்பு 15

## எரிபொருள் விலை மீண்டும் உயர்ந்தது

### அதிகாலையில் அதிர்ச்சி

கொழும்பு, மே. 25

நாட்டில் நேற்று அதிகாலை 3 மணி முதல் அமுலுக்கு வரும் வகையில் எரிபொருள் விலை அதிகரிக்கப்பட் டுள்ளது. இதன்படி, ஒக்ரேன் 92 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் புதிய விலையாக 15

## உணவுகள் விலையுயர்வு!

கொழும்பு, மே 25

எரிபொருள் விலை உயர்வுக்கு ஏற்ப நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் கொத்து ரொட்டி உள்ளிட்ட உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன என்று சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது 15

## நிதி அமைச்சையும் பிரதமரே ஏற்பார்?



கொழும்பு, மே 25

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே நிதியமைச்சராக பதவியேற்கவுள்ளார் என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அமைச்சர் ஒருவர் நியமிக்கப்படும் வரை பதில் நிதிய மைச்சராக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, செயல்படுவார் என்று அமைச்சரவை இணை பேச்சாளருமான காஞ்சன விஜயசேகர தெரிவித் 15

## போக்குவரத்து கட்டணமும் அதிகரிப்பு!

கொழும்பு, மே 25

நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் போக்குவரத்து கட்டணங்கள் அனைத்தும் அதிகரிக்கப்பட்டதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பேருந்து கட்டணம் 19.5 சத 15

## புலமைப்பரிசில் பரீட்சை; வெட்டுப்புள்ளி வெளியீடு

கொழும்பு, மே 25

2021 ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளுக்கான வெட்டுப்புள்ளிகள் வெளியிடப்பட்டுள்ளன.

இதன்படி, தமிழ் மொழி மூல பாடசாலைகளுக்கான வெட்டுப் புள்ளிகள் நேற்று அறிவிக்கப் 15

## 21 ஐ நிறைவேற்றமுடியாமல் போனால் பாராளுமன்றத்தை கலைத்து தேர்தல்!

### சிங்கள ஊடகம் பரபரப்பு தகவல்

கொழும்பு, மே. 25

அரசமைப்பின் 21 ஆவது திருத்த சட்டத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்ற முடியாது போனால் பாராளுமன்றத்தைக் கலைத்து தேர்தல் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாக சிங்கள இணையத் தளம் பரபரப்பு தகவலை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அந்த இணையத் தளத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை வெளியாகிய செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அரசமைப்பின் 21 ஆவது திருத்தச் சட்டத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றமுடியாது போனால் உடனடியாக பாராளுமன்றத்தை 15

## முறையாக களஞ்சியப்படுத்தாமையால் 625 கோடி ரூபாய் மருந்துகள் பழுதடைவு

கொழும்பு, மே 25

மருந்துகளை உரிய முறையில் களஞ்சியப்படுத்தாமையால் 2011ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரையில் 625.9 கோடி ரூபாய் பெறுமதியான மருந்துகள் பயன்படுத்த முடியாத நிலைக்கு உள்ளாகின.

இந்த மருந்துகள் பயன்பாட்டுக்குப் பொருத்தம் இல்லாதவை என அடையாளம் காணப்படும்போது 99 வீதமானவை நோயாளிகளுக்கு அவை வழங்கப்பட்டுள்ளமை அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த தரமற்ற மருந்துகளுக்கான செலவை வழங்குநர்களிடமிருந்து அறிவிட்டுக் கொள்ள முடியாமல் போயுள்ளது.

ஔடதங்களின் உறுதித்தன்மை காணப்படும் வகையில், உரிய தரத்தில் அவற்றை களஞ்சியப்படுத்த முடிந்தளவு விரைவில் வசதிகளை ஏற்படுத்துமாறும் கோபா குழு 15

## இப்படியும் நடக்கிறது...!

இருபத்தியோராவது அரசியலமைப்பு திருத்தத்தை பாராளுமன்றில் சமர்ப்பித்தாலும், அது சாத்தியமாகாது என்ற சந்தேகத்தை நேற்றைய இந்தப் பத்தியில் கோடிட்டிருந்தேன்.

பிரதி சபாநாயகர் தேர்வின்போது, பொதுஜன முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் நடந்துகொண்ட விதத்தை விளக்கி, அதுபோலவே, இந்த இருபத்தியோராவது திருத்த விவகாரத்திலும் பொதுஜன முன்னணி நடந்துகொள்ளலாம் என்ற சந்தேகத்தை அந்தப் பத்தியில் எழுப்பியிருந்தேன். இந்த எதிர்பார்ப்பே இப்போது பலரிடமும் உண்டு. இரட்டை பிரஜாவுரிமை கொண்டவர்கள் பாராளுமன்றில் உறுப்பினராவதைத் தடுக்கும் வகையில் அமையவிருக்கும் இந்தத் திருத்தத்தை பொதுஜன முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆதரிப்பார்களா? அவ்வாறு ஆதரித்தால், அவர்களின் கட்சியின் தலைவரான பசில் ராஜபக்ஷவே பதவி இழக்கும் நிலை வரலாம் என்ற நிலையில், அவர்கள் அதனை ஆதரிக்க விரும்ப மாட்டார்கள் என்ற சந்தேகத்தை நேற்றைய பத்தியில் தெரிவித்திருந்தோம்.

அது நிறைவேறுமா அல்லது நிறைவேறாமல் மேலும் காலம் கடத்தப்படுமா என்பதெல்லாம் இருக்கட்டும். ஆனால், வருகின்ற திருத்தத்தில் நாம் அவசரமாக என்ன செய்யவேண்டும் என்று கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோ கேள்வி எழுப்பியிருப்பதுடன், தமிழ் தேசிய கட்சிகளை நோக்கி கோரிக்கை ஒன்றையும் நேற்று விடுத்திருக்கின்றது.

“21ஆவது சட்டத் திருத்தம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதோடு, ஏற்கனவே அரசியல் யாப்பில் இருக்கக்கூடிய அதிகாரப் பகிர்வை நிரந்தரமாகவும் மீளப் பெறப்பட்ட அதிகாரங்களை மீண்டும் வழங்குவதற்கும் வழிசெய்யவேண்டும்.

இந்த சந்தர்ப்பத்தை சரியான முறையில், சிறப்பாக ஒருமித்து நின்று கையாள்வதற்கு தமிழ்த் தேசியக் கட்சிகளையும் பாராளுமன்ற உறுப்பினர்களையும் தயவுடன் அழைக்கின்றோம்.”

இவ்வாறு, ரெலோ அழைப்பு விடுத்திருகின்றது.

நாட்டில் இன்று ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடி பலரையும் இப்போது அவர்களின் மனச்சாட்சியை தட்டப் பண்ணியிருக்கின்றது.

அதனால்தான், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க, தேசிய இனப் பிரச்னைக்கு தீர்வைக்கண்டிருந்தால், நாட்டின் பொருளாதாரப் பிரச்னை இவ்வளவு தூரத்திற்கு வந்திருக்காது என்று தெரிவித்திருக்கிறார். அதேவேளை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவோ, புலம்பெயர் தமிழர்களும் இன்றைய நெருக்கடிக்கு உதவவேண்டும் என்று கோரிக்கை விடுத்திருக்கிறார்.

அதாவது, தேசிய இனப் பிரச்னைக்கு தீர்வைக்கண்டிருந்தால், இன்று புலம்பெயர் தமிழர்கள் உதவியிருப்பார்கள் என்பதை சந்திரிகா கோடிட்டுக்காட்ட, ரணில் கோரிக்கை விடுத்திருக்கிறார்.

இந்த வேளையில், ரெலோவின் கோரிக்கை தமிழ் மக்களின் கவனத்திற்குரியது.

இருபத்தியோராவது திருத்தம் வருமோ வராதோ, அது வேறு விடயம். ஆனால், அது வருகின்றபோது அதனை எப்படி நமக்கு சாதகமாகப் பயன்படுத்துவது என்பதை தமிழ் அரசயல் கட்சிகள் யோசிக்கவேண்டும்.

புதிய நீதி அமைச்சசர் விஜயதாச ராஜபக்ஷ அமைச்சரவைக்கு தாக்கல் செய்த இந்த திருத்த யோசனையை பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளின் பார்வைக்கு அனுப்பி, அவர்களின் யோசனைகளையும் உள்வாங்கி, அதனை மீண்டும் அமைச்சரவையில் ஒப்படைக்க அமைச்சரவை தீர்மானித்திருக்கின்றது.

இந்தச் சந்தர்ப்பத்தில், அந்தத் திருத்தத்தில் ஆகக் குறைந்தது அரசியல்யாப்பில் ஏற்கனவே இருக்கக்கூடிய அதிகாரப்பகிர்வை நிரந்தரமாகவும், மீளப்பெறப்பட்ட அதிகாரங்களை மீண்டும் பெறுவதற்கும் தமிழ் கட்சிகள் முயற்சிக்கவேண்டும் என்ற ரெலோவின் கோரிக்கையிலுள்ள நியாயத்தைப் புரிந்துகொண்டு, அதற்கான முயற்சிகளை தமிழ் தேசியக் கட்சிகள் மட்டுமல்ல, ஒட்டுமொத்த சிறுபான்மைக் கட்சிகளும் முயற்சிக்கவேண்டும்.

இந்த வேளையிலும், புதிய அரசியலமைப்பு, சமஷ்டி ஆட்சிமுறை என்பவைதான் நாட்டின் பொருளாதார நெருக்கடியை தீர்க்க உதவும் என்று வகுப்பெடுக்காமல், ரெலோவின் இந்த முயற்சிக்கு பின்னால் அணிதிரள வேண்டும்.

- ஊர்க்குருவி

# ஜோன்ஸ்டனை கைது செய்யக் கோரி சி.ஐ.டி. முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம்



கொழும்பு, மே 25

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்ரன் பெர்னாண்டோவை உடனடியாக கைது செய்யுமாறு கோரி குற்றப் புலனாய்வு திணைக்களம் முன்பாக நேற்று கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

இதையடுத்து, குற்றப் புலனாய்வு திணைக்களம் முன்பாக பதற்ற நிலை உருவானது.

காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் குழுவால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. மே 9ஆம் திகதி ஆர்ப்பாட்டக்காரர்கள் மீதான தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்ரன் பெர்னாண்டோ நேற்றுக் காலை குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு சென்றிருந்தார்.

வாக்குமூலம் வழங்கியபின் அவர் அங்கிருந்து வெளியேறிய நிலையிலேயே பொலிஸ் தடுப்புகளை அகற்றியதை போராட்டம் இடம்பெற்றது. இதனால், அந்தப் பகுதியில் பதற்றம் ஏற்பட்டது. எனினும், பின்னர் அமைதி நிலை திரும்பியது. (ஐ)

# பொலிஸார் தாக்கினர் என தெரிவித்து ஒருவர் மருத்துவமனையில் அனுமதி!

கிளிநொச்சி, மே 25

நேற்றைய தினம் எரிபொருள் நிரப்புவதற்காக சென்ற சாரதி ஒருவர் மீது பொலிஸார் தாக்குதல் நடத்தினர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. தாக்குதலுக்கு இலக்கானவர் என்று கூறப்படும் தர்புரத்தை சேர்ந்த நபர் கிளிநொச்சி மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

சட்டவிரோத மண் அகழ்வு ஈடுபட்டாரெனக் கூறி கல்லாற்று பிரதான வீதியில் வைத்து பொலிஸார் தாக்கினர் என்று சிகிச்சை பெற்றுவரும் டிப்பர் சாரதி கூறியுள்ளார்.

டிப்பர் வாகனம் எரிபொருள் நிரப்புவதற்காகவே தனது வீடு நோக்கி வந்ததாகவும், வீதியில் சென்ற பொலிஸார் டிப்பர் சாரதியை சரமாரியாக தாக்கினர் என்று வாகனத்தின் உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தர்மபுரம் பொலிஸாரிடம் கேட்டபோது,

சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வு இடம் பெறுவதாகவும் தமக்கு தகவல் கிடைத்த தகவலை அடுத்தே அந்தப் பகுதிக்கு சென்றபோது மணலை கொட்டி விட்டு தப்பிச் சென்றார் என்றும், தாம் சாரதி மீது தாக்குதல் நடத்தவில்லை எனவும் கூறினர். (ஐ)

# அரசில் இணைந்தோர்மீது ஒழுக்காற்று நடவடிக்கை!

## சிறீலங்கா சுதந்திரக் கட்சி

கொழும்பு, மே 25

தற்போதைய அரசாங்கத்தில் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ள கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என சிறீ லங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கட்சியின் மத்திய குழு கூடி முடிவெடுக்கும் என அதன் சிரேஷ்ட உப தலைவர் பேராசிரியர் ரோஹண லக்ஷ்மன் பியதாச தெரிவித்துள்ளார்.

சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் நிமல் சிறிபால டி சில்வா மற்றும் மஹிந்த அமரவீர ஆகியோர் அமைச்சர்களாக பதவிப் பிரமாணம் செய்துகொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# எரிபொருள் வழங்கல் மீண்டும் கட்டுப்பாடு

கொழும்பு, மே 25

லங்கா ஐ. ஓ. சி. எரிபொருள் நிரப்பும் நிலையங்களிலும் வாகனங்களுக்கான எரிபொருள் வழங்கல் மட்டுப்படுத்தப்படவுள்ளதாக அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

இதற்கமைய, மோட்டார் சைக்கிள், முச்சக்கரவண்டி, கார் மற்றும் சிற்றூர்திகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட தொகைக்கு மாத்திரமே எரிபொருள் வழங்கப்படுமென லங்கா ஐ. ஓ. சி. அறிவித்துள்ளது.

அதற்கமைய, மோட்டார் சைக்கிள்களுக்கு அதிகபட்சமாக 2,500 ரூபாய்க்கும், முச்சக்கர வண்டிகளுக்கு அதிகபட்சமாக 3,000 ரூபாய்க்கும், கார், ஜீப் மற்றும் சிற்றூர்திகளுக்கு அதிகபட்சமாக 10,000 ரூபாய்க்கும் மாத்திரமே லங்கா ஐ.ஓ.சி. எரிபொருள் நிலையங்களில் எரிபொருள் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், பேருந்துகள், பாரவூர்திகள் மற்றும் வணிக வாகனங்களுக்கு இந்த வரையறை பொருந்தாது எனவும் லங்கா ஐ. ஓ. சி. அறிவித்துள்ளது.

## இன்றும் எரிவாயு விநியோகம் இல்லை

கொழும்பு, மே 25

இன்றைய தினமும் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்கப்படமாட்டாது என்று லிட்ரோ எரிவாயு நிறுவனம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் வியாழக்கிழமை நாட்டுக்கு 3500 தொன் எரிவாயு இறக்கப்படவுள்ளது. இதன் பின்னரே, எரிவாயு விநியோகம் இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கென புதிய பிரதிப் பொலிஸ் மா அதிபர்

கொழும்பு, மே 25

குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு புதிய பிரதிப் பொலிஸ் மா அதிபர் நியமிக்கப்பட்டுள்ளார். குற்றப் புலனாய்வுத் திணைக் களத்தின் பிரதிப் பொலிஸ் மா அதிபர் டபிள்யூ. திலகரத்னவின் இடமாற்றத்துக்கான கோரிக்கையை பொது பாதுகாப்பு அமைச்சர் ஏற்றுக்கொண்டார்.

இதற்கமைய, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் புதிய பிரதிப் பொலிஸ் மா அதிபராக நுவரெலியா மாவட்டத் திற்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் பிரசாத் ரணசிங்க நியமிக்கப்பட வுள்ளார். (அ)

ஈழநாடு
Eelanadu
25.05.2022 புதன்கிழமை
பிலவ வருடம், வைகாசி 11

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# அதிகாரப் பகிர்வின் முக்கியத்துவம்?

மீளவும் பெற்றோல் விலை அதிகரித்திருக்கின்றது. மேலும் சில பொருட்களின் விலை உயர்ந்திருக்கின்றது. நிலைமைகளில் எந்தவொரு முன்னேற்றமும் இல்லை. ரணில் விக்கிரமசிங்கவின் கூற்றுப்படி, இன்னும் ஒரு சில மாதங்களில் நிலைமை மேலும் மோசமடையவுள்ளது. அவ்வாறாயின் இதற்கு விமோசனமே இல்லையா?

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக தெரிவாகின்றபோது, 19ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ், ஜனாதிபதியின் அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. தனக்கு அதிகம் அதிகாரம் தேவையென்பதற்காகவே, 20ஆவது திருத்தச் சட்டத்தை அவர் கொண்டுவந்தார். இதன் மூலம், அவரது சகோதரர் பஸில் ராஜபக்ஷவும், அதிகார அரசியலுக்குள் கொண்டுவரப்பட்டார். அதிகாரங்கள் மீளவும் ஓரிடத்தில் குவிக்கப்பட்டன. அவற்றால் என்ன பயன்? சர்வ அதிகாரங்களுடன், ஜனாதிபதி இருக்கின்றார். ஆனால், அவரால் எதனையும் செய்ய முடியவில்லை. அடுத்தது என்ன செய்வதென்றே அவருக்கும் தெரியவில்லை. இப்போது அந்த நிறைவேற்று அதிகாரத்தின் பொருள் என்ன?

இந்த பின்னணியில் இப்போது அதிகாரங்களை பகிர்வது தொடர்பில் விவாதிக்கப்படுகின்றது. அதிகாரங்களைக் குவிப்பதால், இந்த நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது - மாறாக, அதிகாரங்களைப் பகிர்வதன் மூலமே, நாட்டை கட்டியெழுப்ப முடியுமென்பதை, இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து, தமிழ் தலைவர்கள் கூறிவந்திருக்கின்றனர். ஆனால், தமிழர்களை இரண்டாம்பட்சமாக்க வேண்டுமென்னும் நோக்கிலேயே, சிங்கள ஆளும் வர்க்கம் ஒவ்வொரு தீர்மானங்களையும் மேற்கொண்டது. அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக, சாதாரண சிங்கள மக்கள் மத்தியில், தமிழர் விரோதமும் போலி பௌத்த மேன்மையும் புகுத்தப்பட்டது. இதன்மூலம் எக்காலத்திலும், அதிகாரத்தில் இருக்க முடியுமென்பதே, சிங்கள அரசியல் சமூகத்தின் ஒரேயொரு கணக்காக இருந்தது.

இலங்கைக்கு சமஷ்டி முறைதான் சிறந்ததென்று வாதிட்ட ஒக்ஸ்போர்ட் கல்விமான், எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க - கட்சி அரசியலுக்குள் பிரவேசித்ததும், குத்துக்கரணம் அடித்தார். தனது தலைமையிலான கட்சியை அதிகாரத்துக்குக் கொண்டுவருவதற்காக, சிங்கள இனவாதத்தைக் கையிலெடுத்தார். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்களும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர்களும், தங்களுக்குள் யார் அதிகம், சிங்கள இனவாதத்துக்கு விசுவாசமானவர்கள் என்பதை காண்பிப்பதில் போட்டி போட்டுக் கொண்டனர்.

1948இலிருந்து - இந்த நாட்டில், இனவாதத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கான போட்டியே, தேசிய அரசியலாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதன் விளைவாக - யார் திறமைசாலிகள் என்பதை விடவும், யார் அதிகம் தமிழர் விரோதத்தை விதைக்கக் கூடியவர்கள் என்பதே, தென்னிலங்கையின் அரசியலானது. இந்த விதையே, தற்போது, பெரும் விஷவிருட்சமாகி, நாட்டை சீரழித்துக் கொண்டிருக்கினறது.

நாடு பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் வீழ்ந்திருக்கின்ற போதுதான், சிங்களவர்கள் இந்த நிலைமையை உணர முற்படுவது போல் தெரிகின்றது. ஆனால், இதில் இன்னும் முன்னேற்றம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. அதிகாரங்கள் ஓரிடத்தில் குவிக்கப்பட்டிருந்ததன், விளைவை நாடு எதிர்கொண்டிருக்கின்றது. இதனை இன்னும் சிங்கள பெரும்பான்மை சரியாகப் புரிந்து கொண்டிருக்கின்றதா என்பது கேள்விதான். ஏனெனில், இதனை சிங்கள பெரும்பான்மை சரியாக புரிந்து கொண்டிருந்தால், இப்போதும் 21இல் எதனை உள்ளடக்குவது என்பது தொடர்பில் விவாதம் செய்ய வேண்டியதில்லை. அதிகாரங்களைப் பகிர்ந்து, அனைத்து சமூகங்களும், நாட்டின் பொருளாதாரத்துக்கு பங்களிக்கக் கூடிய சூழல் உருவாக்கப்பட்டால், நிலைமைகளில் விரைவான மாற்றங்களை காணலாம். அதற்கு அடிப்படையான சிந்தனை மாற்றம் அவசியம்.

# தள்ளாடும் கோட்டாபய அரசு!

**அலசுவது இராஜதந்திரி**



அட்மிரல் கலாநிதி ஜயநாத் கொலம்பகே இலங்கையின் வெளியுறவு செயலாளர் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்துள்ளார். முன்னாள் கடற்படைத்தளபதியாக இருந்த போதிலும் தமது பதவிக்காலத்தில் கல்வித் தகமையோடு கலாநிதிப்பட்டத்தினையும் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே பெற்றிருந்தார்.

அத்துடன் வடக்கு - கிழக்கு யுத்தம் முனைப்படைத்திருந்த காலத்தில் கடற்புலிகளோடு சண்டையிடுவதில் முன்னிலை வகித்த கடற்படை அதிகாரியாக அட்மிரல் ஜயநாத் கொலம்பகே விளங்கினார்.

இதன்காரணமாக அன்று பாதுகாப்புச் செயலாளராக இருந்த கோட்டாபய ராஜபக்ஷவின் கவனத்தைப்பெற்றிருந்த அட்மிரல் ஜயநாத் கொலம்பகே பின்னர் ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ தெரிவானதும் வெளியுறவு செயலாளராக நியமிக்கப்பட்டிருந்தார்.

இலங்கையின் வெளியுறவுத்துறை என்பது தற்போது ஒரு ‘பிச்சாடனர்’ வேடத்தில் இருப்பதையே அவதானிக்க முடிகின்றது. வெளிநாடுகளிடம் இருந்து கடனுதவிகளையும், உணவு மற்றும் மருந்துப்பொருட்களையும் பெற அரசுக்கு அனுசரணையாக இருப்பதே இலங்கை வெளியுறவுத் துறையின் முக்கிய பணியாக இருக்கின்றது.

இலங்கை வடக்கு - கிழக்கு யுத்தம் முடிவுக்கு வந்த கடந்த பதின்மூன்று வருட காலத்தில் இலங்கையின் வெளியுறவுத்துறை ராஜதந்திர ரீதியாக பலத்த சவால்களை சந்தித்திருந்தது.

இவற்றில் மிக முக்கியமானதே ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரச தரப்பின் மீதான மனித உரிமை மீறல்கள் குறித்த குற்றச்சாட்டாகும்.

இலங்கை சரிவர மனித உரிமைகளைப் பேணியிருக்கும் பட்சத்தில் யுத்தம் முடிவுற்றதுமே வெளி உலக உதவிகள் முதலீடுகளாகவும், நிதி உதவிகளாகவும் கிடைத்திருக்கக்கூடிய வாய்ப்புகள் அதிகமாகவே இருந்தன. ஆனால் சர்வதேச சமூகத்தின் நாடிபிடித்தறியாது தவறான பொருளாதார கொள்கைகளை கையாண்டது கூட இலங்கை இன்று எதிர் நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடிக்கு முக்கிய காரணமாகும்.

இலங்கையின் வெளியுறுவு நிலைப்பாடுகளை நோக்கும் போது வெளிநாடுகள் ஆயுத தளபாட விற்பனை மூலமாக இலங்கையிடமிருந்து சம்பாதித்துக்கொண்டதே அதிகமே தவிர இலங்கை தனது வெளியுறவு தொடர்புகள் மூலமாக எவ்விதத்திலும் பயனடைந்திருக்கவில்லை. இதற்கு மூலகாரணம் இலங்கையின் வெளியுறவுத் துறை சிறந்த ராஜதந்திர நிபுணத்துவம் கொண்டவர்களை கொண்டிருக்கவில்லை.

அறுபதுகளிலும் எழுபதுகளிலும் கூடவே எண்பதுகளின் ஆரம்பத்திலும் இலங்கையின் வெளியுறவுத்துறை குறிப்பிடத்தக்கதாக அமைந்திருந்தது. ராஜதந்திர சேவைகளில் சிறப்புற்ற பலர் இலங்கை வெளிநாட்டுச் சேவையிலிருந்தனர்.

மறைந்த பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் ஆட்சியில் மிக நெருக்கமான உறவை இந்தியாவுடன் இலங்கை கொண்டிருந்த அதேசமயம் இந்தியாவுடன் எல்லைப்புற சர்ச்சைகளைக் கொண்டிருக்கும் சீனாவுடனும் இலங்கை உயர்வான உறவைக் கொண்டிருந்தது.

இலங்கையின் வெளியுறவுக்கொள்கைக்கு கிடைத்த கௌரவமாகவே இலங்கைக்கு அணிசேரா உச்சி மகாநாட்டை நடத்தும் சந்தர்ப்பமும் கிடைத்திருந்தது.

நாளடைவில் ‘கழுதை தேய்ந்து கட்டெறும்பான’ கதையாகவே இலங்கையின் வெளியுறவுத்துறை மாற்றங்கண்டிருந்தது.

பின்நாட்களில் லக்ஷ்மன் கதிர்காமர் வெளிநாட்டமைச்சராக இருந்தபோது இலங்கையின் வெளியுறவுத்துறை மேம்பட்டிருந்தது. தகுதியானவர்கள் தூதர்களாகவும் வெளியுறவுத்துறையின் ஏனைய பதவிகளுக்கும் நியமிக்கப்பட்டிருந்தனர்.


ஆனால் ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷ பதவிவகித்தபோது எவ்வித வெளியுறவுத்துறை சார்ந்த அறிவோ அல்லது சாதராண பொது அறிவோ இல்லாதவர்கள் கூட வெளிநாடுகளில் உள்ள தூதரகங்களில் அரசியல் செல்வாக்கின் அடிப்படையில் பணியிலமர்த்தப்பட்டனர்.

இந்நிலையில் தற்போது இலங்கை பொருளாதார ரீதியான நெருக்கடிகளில் சிக்கி வெளிநாட்டு உதவிகளையே பெரிதும் நம்பியிருக்கின்ற தருணத்தில் பொறுப்புமிக்க வெளியுறவு செயலாளர் பதவியிலிருந்து அட்மிரல் ஜயந்த கொலம்பகே இராஜினாமாச் செய்திருப்பது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மீதான அதிருப்தி ராஜதந்தர மட்டத்திலும் வலுவடைவதையே சுட்டிக்காட்டுகின்றது.

புதிய வெளியுறவுத்துறை செயலாளராக இலங்கை வெளியுறவுச்சேவையில் நீண்ட நாள் அனுபவம் கொண்ட அருணி விஜேவர்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

இப்புதிய நியமனத்தின் மூலம் தெளிவாகியுள்ள விடம் என்னவெனில் படையதிகாரிகளையும், தமக்குப்பிடித்தமானவர்களையும் அவர்களுக்கு முன் அனுபவம் இல்லாத பொறுப்பு வாய்ந்த பதவிகளில் அமர்த்தி தனது தலையில் தானே மண்ணை அள்ளிக் கொட்டிய நிலைக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உள்ளாகியுள்ளார். ●

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



மே - 25 புதன்கிழமை
சுபகிருது வருடம் - வைகாசி 11
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : திதித்துவயம்




## இன்றைய ராசிபலன்

**மேடம்**
எதிர்பார்த்த வகையில் இன்று வருமானம் வரும். கடன்களை அடைத்து நிம்மதி அடைவீர்கள். தொழிலில் வருமானம் அதிகரிக்கும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**இடபம்**
தொழிலை விரிவு செய்யும் சிந்தனை மேலோங்கும். புதிய திட்டம் தீட்டி வெற்றி காண்பீர்கள். எதிர்பார்த்த நல்ல தகவல் வந்து சேரும். தேவைக்கேற்ப வருமானம் உங்களுக்கு வந்து சேரும்.

**மிதுனம்**
உறவினர் ஆதரவு கிடைக்கும். எதிர்பார்ப்பு ஒன்று இன்று நிறைவேறும். விடாமுயற்சிக்குப்பின் தேவை நிறைவேறும். யோசித்து செயல்பட்டால் எதிர்பார்த்த லாபத்தை அடையலாம்.

**கடகம்**
தேவையற்ற குழப்பம் ஏற்படும். எதிர்பாராத தடைகளால் நினைத்தது நிறைவேறாமல் போகும். புதிய முயற்சிகளை தவிர்க்கவும். மற்றவர்களின் விஷயங்களில் தலையிட வேண்டாம்.

**சிம்மம்**
உங்கள் முயற்சிகளில் வெற்றி அடைவீர்கள். நண்பர்களுக்கு உதவி செய்வீர்கள். நீங்கள் விரும்பிய பொருள் கைக்கு வந்து சேரும். தடைகள் விலகும் நாள். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும்.

**கன்னி**
உற்சாகமுடன் செயல்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள். எதிரி தொல்லை மறையும். நன்மையான நாள். துணிவுடன் செயல்பட்டு நினைத்ததை நிறைவேற்றிக் கொள்வீர்கள். அதிர்ஷ்ட வாய்ப்பு தேடி வரும்.

**துலாம்**
செயல்களில் தாமதம் ஏற்படும். கோபத்தை பிறரிடம் காட்ட வேண்டாம். செயலில் தடைகளை சந்திப்பீர்கள். சொத்துப் பிரச்னையால் சங்கடங்களை சந்திக்கலாம். நண்பர்களால் தொல்லைகள் ஏற்படும்.

**விருட்சிகம்**
எதிர்பார்த்த வருமானம் வந்து சேரும். கணக்கு வழக்குகளில் கவனமுடன் இருங்கள். யோசித்து செயல்பட வேண்டிய நாள். உறவினர் விஷயத்தில் எச்சரிக்கை தேவை. தடைகள் உண்டாகும்.

**தனுசு**
சுபச்செலவுகளை சந்திப்பீர்கள். வேலை வாய்ப்பு முயற்சி இன்று வெற்றியடையும். முன்னேற்றமான நாள். நினைத்ததை அடைவீர்கள். சகோதரர்களுடன் ஏற்பட்ட பிரச்னைகள் தீரும். மகிழ்ச்சியான நாள்.

**மகரம்**
உங்கள் பேச்சால் சங்கடங்களை சந்திக்க நேரிடும். செயல்களில் அவசரம் வேண்டாம். கவனம் தேவை. குடும்பத்தினரால் நெருக்கடி வரலாம். எதிர்பார்த்த வருமானத்தில் தாமதம் ஏற்படும்.

**கும்பம்**
நினைத்ததை சாதிப்பீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும். உறவினர்கள் வழியில் ஏற்பட்ட பிரச்னைகள் விலகும். மனக் குழப்ப வரலாம். நிம்மதி பாதிக்கும்.

**மீனம்**
அலைச்சல் கூடும். வீண் முயற்சிகளால் சங்கடத்தை அடைவீர்கள். எச்சரிக்கை தேவை. மனதில் இனம் புரியாத குழப்பம் ஏற்படும். செயல்களில் இழுபறியும் சங்கடமும் உண்டாகும். செலவை சமாளிக்க முடியாமல் திணறுவீர்கள்.

*7 தமிழர் விடுதலை விவகாரம்*

# “தி. மு. க. கூறுவதை ஏற்பது காங்கிரஸின் வேலை இல்லை”

விருதுநகர், மே 25

“பேரறிவாளன் உட்பட 7 பேர் விடுதலை விவகாரத்தில், தி.மு.க. கூட்டணியில் உள்ள மற்றகட்சிகள் ஒவ்வொரு நிலைப்பாடும், காங்கிரஸ் கட்சி வேறு நிலைப்பாடும் எடுத்துள்ளன. அதேபோல், தி.மு.க. சொல்வதை எல்லாம் ஏற்பது காங்கிரஸின் வேலை இல்லை. நாங்கள் சொல்வதை ஏற்றுக் கொள்வது தி.மு.கவின் வேலையும் இல்லை - என்று அந்தக் கட்சியின் விருதுநகர் எம். பி. மாணிக்கம் தாகூர் கூறினார்.

நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில்,

உதய்பூரில் 3 நாட்கள் நடைபெற்ற காங்கிரஸ் ஆலோசனைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி, கட்சியில் முக்கியமான 5 மாற்றங்கள் நடக்க உள்ளன.

பேரறிவாளனை ஒரு தியாகிபோல சித்தரித்து, அவரது விடுதலையைக் கொண்டாடுவது எவ்விதத்தில் நியாயம்.

சீமான் பாஜகவின் பி அணி. பேரறிவாளன் விடுதலை பா.ஜ.கவால் நடத்தப்படும் சதி. அதில், முக்கிய கதாபாத்திரம் சீமான்தான் - என்றார். (ஐ)

# மாடுபிடி போட்டியை அலங்கா நல்லூரில் ஆண்டு முழுவதும் நடத்துவதற்கு ஏற்பாடு!

மதுரை, மே 25

மதுரை மாவட்டம் அலங் காநல்லூர் அருகே பிரமாண் டமாக அமைக்கப்படும் அரங்கில் ஆண்டு முழுவதும் மாடுபிடி (ஜல்லிக்கட்டு) போட்டிகள் நடத்தப்படும் என்று தமிழகத்தின் அமைச்சர் பி. மூர்த்தி தெரிவித்தார்.

மதுரை மாவட்டத்தில் ஜல்லிக்கட்டு போட்டிகளை நடத்த பிரமாண்ட அரங்கம் அமைக்கப்படும் என முதல்வர் மு. க. ஸ்டாலின் ஏற்கெனவே அறிவித்திருந்தார்.

இந்நிலையிலேயே அமைச்சர் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார். நேற்றைய தினம் மாடுபிடி அரங்கம் அமைப்பதற்கான இடத்தைப் பார்வையிட்ட அவர் செய்தியாளர்களிடம் கூறுகையில், “மாடுபிடி நடத்த பிரமாண்டமான அரங்கு அமைக்க முதல்வர் ஒப்புதல் அளித்துள்ளார். மதுரை மாவட்டத்தில் பொங்கல் பண்டிகையின்போது தை 1,2,3 ஆகிய தேதிகளில் முறையே அவனியாபுரம், பாலமேடு, அலங்காநல்லூர் ஆகிய இடங்களில் உலகப் புகழ்பெற்ற ஜல்லிக்கட்டுப் போட்டி நடப்பது வழக்கம்.

அலங்காநல்லூர் அருகே புதிதாக ஜல்லிக்கட்டு அரங்கம் அமைக்கப்படும். இந்த அரங்கத்துக்கும், தை பொங்கலின்போது பாரம்பரியமாக அலங்காநல்லூரில் நடக்கும் ஜல்லிக்கட்டுக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை.

தற்போது அமைக்கப்பட உள்ள பிரமாண்ட அரங்கம் உலக தமிழர்களுக்கானது. வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்த்து சுற்றுலாவை மேம்படுத்தும் நோக்கில் இந்த அரங்கம் அமைக்கப்படுகிறது. ஆண்டு முழுவதும் ஒவ்வொரு மாதமும் ஓரிரு நாட்கள் இங்கு ஜல்லிக்கட்டு நடத்தப்படும் - என்றார். (ஐ)

# பேரறிவாளன் விடயத்தில் முரண்பாடு; தி.மு.கவுடனான கூட்டணி தொடரும்

## காங்கிரஸ் கட்சி உறுதி

சென்னை, மே 25

பேரறிவாளன் விவகாரத்தில் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் தி. மு. க. - காங்கிரஸ் கூட்டணி தொடரும் என காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர் திருநாவுக்கரசு தெரிவித்துள்ளார்.

பேரறிவாளன் விடுதலையில் காங்கிரஸ் கட்சியினருக்கு உடன்பாடு இல்லை. பேரறிவாளனை விடுவிக்கும் போது நீதிமன்றம் அவரை நிரபராதி என குறிப்பிடவில்லை. ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்ட காலத்திலிருந்தே அ.தி.மு.க. மற்றும் தி.மு.க. கருத்துக்களுக்கு எதிரான நிலைப்பாட்டை காங்கிரஸ் கட்சியினர் எடுத்து வந்துள்ளனர்.

காங்கிரஸ் கட்சியின் தலைவர் கொல்லப்பட்டதை எங்களால் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. காங்கிரஸார் தங்கள் கருத்தில் தெளிவாக உள்ளனர். தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணியை அவ்வளவு எளிதில் பிரித்துவிட முடியாது. பேரறிவாளன் விவகாரத்தில் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் தி. மு. க. - காங்கிரஸ் கூட்டணி தொடரும் - என்றார். (ஐ)

# சிதம்பரம் தில்லை கோயிலில் சிவனடியார்கள் ஆர்ப்பாட்டம்!

சிதம்பரம், மே 25



சிதம்பரம் தில்லை நடராஜா, தில்லை காளி சாமிகள் பற்றி யூ- ரியூப் சனல் ஒன்றில் ஆபாசமாகவும் அவதூறாகவும் பதிவு செய்தமைக்காக அந்த சனலின் நிர்வாகியைக் கைது செய்ய வலியுறுத்தி, சிதம்பரத்தில் சிவனடியார்கள் கூட்டமைப்பு சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து மூவாயிரத்துக்கும் மேற்பட்ட சிவனடியார்கள் ஒன்றிணைந்து ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர். அப்போது, சம்பவம் குறித்து தமிழகத்தின் பல்வேறு காவல் நிலையங்களில் முறைப்பாடு அளித்தும் சம்பந்தப்பட்டவர்மீது நடவடிக்கை இல்லையென தமிழக அரசைக் கண்டித்தும், உடனடியாக நடவடிக்கை எடுக்கக் கோரியும் சிவனடியார்கள் முழக்கங்கள் எழுப்பினார்கள்.

ஆர்ப்பாட்டத்திற்கு வந்த சிவனடியார்கள் அனைவருக்கும் காலை, மதியம், இரவு என மூன்று வேளை உணவும் ஏற்பாடு செய்து வழங்கப்பட்டது.

முன்னதாக, காலையில் இருந்தே ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்வதற்காக சிவனடியார்கள் சிதம்பரத்தில் குவிந்து வந்தனர். சிதம்பரத்துக்கு வந்த சிவனடியார்கள் சிதம்பரம் நடராஜர் கோவிலுக்குச் சென்று அங்கு மேள தாள, சிவ வாத்தியங்கள் முழங்க நடனம் ஆடினார்கள்.

பின்னர், நடராஜர் கோவில் கனக சபைக்குச் சென்று சாமியை வழிபட்டனர். சிதம்பரத்தில் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட சிவனடியார்கள் ஒன்று கூடியதால் பரபரப்பு ஏற்பட்டது. (ஐ)



# யாழ். பரமேஸ்வரா சந்திப் பகுதியில் மக்கள் வீதியை மறித்து போராட்டம்

யாழ்ப்பாணம், மே 25

யாழ்ப்பாணம், திருநெல்வேலி பரமேஸ்வரா சந்திப் பகுதியில் சமையல் எரிவாயு விநியோகிக்க வலியுறுத்தி இன்று காலை 9 மணியளவில் வீதியை மறித்து மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பரமேஸ்வரா சந்திப் பகுதியில் உள்ள லிட்ரோ முகவர் நிலையத்தில் கடந்த சில நாட்களாக எரிவாயு வழங்கப்படுவதாக கூறிவந்தாலும் யாருக்கும் வழங்கப்படவில்லை.

இந்நிலையில் குறித்த எரிவாயு முகவர் நிலையத்துக்கு முன்பாக எரிவாயு சிலிண்டர்களுடன் சென்றவர்கள் எரிவாயு கிடைக்காத நிலையில் வீதியை மறித்துப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

குறித்த முகவர் நிலையத்தில் எரிவாயு சிலிண்டர்கள் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக மக்கள் குற்றம்சாட்டிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சம்பவ இடத்துக்கு வருகை தந்த கோப்பாய் பொலிஸார் குறித்த முகவர் நிலையத்தைச் சோதனையிட்டபோது அங்கு எரிவாயு சிலிண்டர்கள் எவையும் இல்லை.

எரிவாயு சிலிண்டர் இருப்பில் இருக்கும்போது வழங்க மறுத்தால் தாம் தலையிட்டு விநியோகிக்க நடவடிக்கை எடுப்பதாக கோப்பாய் பொலிஸார் வாக்குறுதியளித்ததை அடுத்து மக்கள் போராட் டத்தை கைவிட்டு கலைந்து சென்றனர். (அ)

# போக்குவரத்து மற்றும் சேவை கட்டணங்களும் அதிகரிக்கும்?

கொழும்பு, மே 25

எரிபொருள் விலை அதிகரிப்பிற்கு ஏற்ப போக்குவரத்து மற்றும் ஏனைய சேவைக் கட்டணங்களை திருத்தவும் அமைச்சரவை அனுமதி அளித்துள்ளதாக எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இரு வாரங்களுக்கு ஒரு முறை அல்லது மாதத்துக்கு ஒரு முறை விலைசூத்திரம் பயன்படுத்தப் படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

சாதாரணதர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தாமல், கட்டணங்களைத் திருத்துவது குறித்து கலந்துரையாடுமாறும் போக்குவரத்துத் துறையிடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (அ)



# எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு 24 மணித்தியால பொலிஸ் பாதுகாப்பு

கொழும்பு, மே 25

நாடளாவிய ரீதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு 24 மணித்தியால பொலிஸ் பாதுகாப்பினை வழங்குமாறும், நடமாடும் கண்காணிப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் அனைத்து சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுக்கும் பணிப்புரை விடுத்து பொலிஸ் மா அதிபரினால் விசேட சுற்றறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் எரிபொருளை பெறுவதற்கு வேறு வழிகளை பயன்படுத்துவதாக தகவல் வெளியாகியுள்ள நிலையில், இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த விடயம் தொடர்பில் விசாரணை நடத்துமாறு அனைத்து பொலிஸ் அதிகாரிகளுக்கும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வரிசைகளில் காத்திருக்கும் மக்களின் பாதுகாப்பினை உறுதி செய்யுமாறும், இடையூறு விளைவிக்கும் அவசியமற்ற நபர்களை வெளியேற்றுமாறும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மேலும், எரிபொருள் நிரப்பு நிலையங்களில் உள்ள எரிபொருள் கொள்கலன்களுக்கு பாதுகாப்பை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் பொலிஸ் மா அதிபர் பணிப்புரை விடுத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# 21ஆவது திருத்தச்சட்டமூலம் வெறும் கண்துடைப்பு ஏற்பாடு

## இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அதிருப்தி

கொழும்பு, மே 25

**அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட அரசமைப்பிற்கான 21 ஆவது திருத்த வரைவு வெறும் கண்துடைப்பு ஏற்பாடுதான் என்ற சாரப்பட விசனம் தெரிவித்திருக்கின்றது இலங்கை சட்டத்தரணிகள் சங்கம்.**

நீதி, சிறைச்சாலைகள் விவகாரங்கள் மற்றும் அரசமைப்பு சீர்திருத்த அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவினால் நேற்று முன் தினம் அமைச்சரவையில் முன்வைக்கப்பட்ட அரசமைப்பின் 21 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பான வரைவில் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களைக் கட்டுப்படுத்தக் கூடிய அரசமைப்பின் 19 ஆவது திருத்தச் சட்டத்தின் முக்கியமான ஏற்பாடுகள் உள்ளடக்கப்படவில்லை என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அதிருப்தி தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் கவலையும் அதிருப்தியும் தெரிவித்து இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு

எழுதியுள்ள கடிதத்திலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அரசமைப்பின் 21 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பான வரைவை இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் ஆராய்ந்துள்ளது.

நாட்டில் அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மையை மீட்டெடுப்பதற்கான இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்மொழிவுகளுக்கு கடந்த ஏப்ரல் 23 ஆம் திகதி சட்டத்தரணிகள் கவுன்ஸில் ஒப்புதல் அளித்திருந்தது.

20ஆவது திருத்தத்தின் ஏற்பாடுகளை நீக்கி 19ஆவது திருத்தத்தை மீளக் கொண்டுவருவதன் மூலமும் 19ஆவது திருத்தத்தின் கீழ் இருந்த அரசமைப்புப் பேரவை மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்களை மீண்டும் நிறுவுவதற்கும், அதே வேளை நிதிச் சுதந்திரம், வெளிப் படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை மேம்படுத்துவதற்கும் அரசமைப்பின் 21ஆவது திருத்தத்தை அறிமுகப்படுத்துவதற்கு 13 விடயங்களை உள்ளடக்கிய முன்மொழிவில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் முன்மொழிந்தது.

அரசமைப்புச் சபை மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்கள் தொடர்பாக அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தின் ஏற்பாடுகள் 21ஆவது திருத்தம் மூலம் மீளக்கொண்டுவரப்படும் என்று சட்டத்தரணி கள் சங்கம் கருதியது. ஆனால் இதுதொடர்பாக 19 ஆவது திருத்தத்தில் உள்ள முக்கிய ஏற்பாடுகள் 21ஆவது திருத்தவரைவில் உள்ளடக்கப்படவில்லை.

19 ஆவது திருத்தத்தின் ஏற்பாடுகள் ஜனாதிபதி தனக்கு எந்தவொரு அமைச்சுக்கான விடயதானங்களையும் செயற்பாடுகளையும் ஒதுக்குவதைத் தடுக்கிறது. ஆனால் 21 ஆவது திருத்தம் அத்தகைய தடுப்பு ஏற்பாடுகள் உள்ளடக்கவில்லை. எனவே ஜனாதிபதி தொடர்ந்தும் அமைச்சுக்களைத் தக்க வைத்துக் கொள்ளவும், எந்தவொரு விடயதானங்களையும் செயற்பாடுகளையும் தனக்கு ஒதுக்கிக் கொள்ளவும், எந்தவொரு அமைச்சரின் விடயதானங்களையும் செயற்பாடுகளையும் எடுத்துக் கொள்ளவும் முடியும்.

21ஆவது திருத்தம் அரசமைப் பின் சரத்து 44(2)ஐத் திருத்தும் விதியை உள்ளடக்கியிருக்க வேண்டும். 21ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டவுடன் ஜனாதிபதி அமைச்சுக்களைத் தக்க வைத்துக்கொள்ளும் மற்றும் எந்தவொரு விடயங்கள் அல்லது செயற்பாடுகளையும் தனக்கே ஒதுக்கும் அதிகாரத்தை நீக்கி அத்தகைய ஏற்பாடு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

நாடாளுமன்றத்தை கலைப்பது தொடர்பான 19ஆவது திருத்தத்தில் உள்ள ஏற்பாடுகள் மீளமைக்கப்பட வேண்டும். மேலும் சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்மொழிவுகளில் உள்ள பின்வரும் விடயங்களை 21 ஆவது திருத்தத்தில் சேர்க்குமாறு சட்டத்தரணிகள் சங்கம் பரிந்துரைக்கின்றது.

1. நாணயச் சபையின் உறுப்பினர்கள் அரசமைப்புப் பேரவையின் ஒப்புதலுடன் நியமிக்கப்பட வேண்டும்.

2. அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண ஆளுநர்கள், வெளிநாட்டுத்தூதுவர்கள் மற்றும் தூதரகத் தலைவர்கள் போன்றோர் அமைச்சரவையுடன் கலந்தாலோசித்து பிரதமரின் ஆலோசனையுடன் நியமிக்கப்பட வேண்டும்.

3. அரசமைப்புச் சபையின் பரிந்துரைக்கமைய ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட சட்டரீதியான ஒரு அமைப்பு மூலம் ஜனாதிபதியின் பொது மன்னிப்புக்கள் சிபார்சு செய்யப்பட வேண்டும்.

4. நிதி சுதந்திரம், வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான ஏற்பாடுகள்.

17ஆவது திருத்தத்தில் காணப்பட்டவாறு அரசமைப்புச் சபையின் பாராளுமன்ற உறுப்பினர்களல்லாத உறுப்பினர்களின் எண்ணிக்கையை 3 இல் இருந்து 5 ஆக அதிகரிக்க வும், மாறாக அரசமைப்புச் சபையில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக் கையை 7 இல் இருந்து 5 ஆக குறைக்கவும், சட்டத்தரணிகள் சங்கம் பரிந்துரைக்கிறது. இது 2015 இல் 19 ஆவது திருத்தம் அமுல்படுத்தப்பட்டபோது சட்டத்தரணிகள் சங்கம் எடுத்த நிலைப்பாட்டுடன் ஒத்துப்போகிறது.

அரசமைப்பின் 21 வது திருத்தம் இலங்கையில் ஸ்திரத்தன்மையை அடைவதற்கு அவசியமான ஒரு படியாக இருப்பதால் அதை முன்கூட்டியே நிறைவேற்றுவதை உறுதி செய்யுமாறு சட்டத்தரணிகள் சங்கம் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கின்றது-என்றுள் ளது. (அ)

# தானியங்களுக்கு கடும் தட்டுப்பாடு

## மூடப்பட்டது 'திரிபோஷா' தொழிற்சாலை

கொழும்பு, மே 25

தானியங்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக அரசாங்கத்திற்கு சொந்தமான 'திரிபோஷா' தொழிற்சாலை மூடப்பட்டுள்ளது.

இலங்கையில் கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்கு இலவசமாக வழங்கப்படும் ஊட்டச்சத்து உணவே திரிபோஷா ஆகும்.

சோளம் மற்றும் சோயா விநியோகம் முற்றிலும் தடைபட்டுள்ள நிலையில் திரிபோஷவை உற்பத்தி செய்வதில் பிரச்னை எழுந்துள்ளது.

இருப்பினும் இந்த ஆண்டு ஒக்டோபர் மாதத்திற்குள் சோளம் அறுவடை செய்யப்பட்டவுடன் புதிய இருப்புகளை பெற்றுக்கொள்ளலாம் என அதிகாரிகள் எதிர்பார்த்துள்ளனர்.

இதேவேளை நாடு முழுவதும் உள்ள கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் புதிதாகப் பிறந்த குழந்தைகளை ஊட்டச் சத்து குறைபாடு பாதித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊட்டச்சத்து குறைபாடு மிக சிக்கலான பிரச்னையாக எதிர்காலத்தில் மாறும் அபாயத்தை இலங்கை எதிர்கொள்கிறது என வைத்தியர் ஜயருவான் பண்டார தெரிவித்தார். (அ)

# சகலரது ஒத்துழைப்போடும் 21 ஐ நிறைவேற்றவேண்டும்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, மே. 25

**அரசியலமைப்பின் 21ஆவது திருத்தச் சட்டத்தை முன்வைத்து அனைவரது ஒத்துழைப்போடும் அதனை நிறைவேற்றுவதற்கு எதிர்பார்ப்பதாக பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.**

அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள விசேட அறிக்கையிலேயே பிரதமர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ள அவர், அரசியலமைப்பின் 21ஆவது திருத்தம் தொடர்பான குழு கூடியது. அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவின் வரைவு குறித்து கலந்துரையாடி அமைச்சரவையில் முன்வைக்க தீர்மானிக்கப்பட்டது. மாலையில் இந்த வரைவு அமைச்சரவையில் விவாதிக்கப்பட்டு, பாராளுமன்றத்தில் அனைத்துக் கட்சித் தலைவர்களிடமும் இந்த வரைபை முன்வைத்து, அவர்களுடன் விவாதித்து பின்னர் அமைச்சரவைக்கு அறிக்கை அளிக்குமாறு எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.

இதன்படி 21வது திருத்தச் சட்டத்தின் பிரதிகளை அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் கட்சித் தலைவர்களிடம் கையளிக்கவுள்ளார். அதன் பிறகு வெள்ளிக்கிழமை சந்தித்து அந்த யோசனைகளைப் பெறுவோம் என்று நம்புகிறோம்.



அதன் பின்னர் திருத்தங்களுடன் முழுமையான அறிக்கை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படும். இந்த திருத்தத்தை முதலில் வர்த்தமானி அறிவித்தலில் விரைவாக வெளியிட்டு பின்னர் உயர்நீதிமன்றத்துக்கு செல்ல விரும்புவோருக்கு சந்தர்ப்பம் வழங்குவதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

அதை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து, அனைவரின் ஆதரவுடன் இந்த திருத்தத்தை உடனடியாக நிறைவேற்றுங்கள் - என்றார். (அ)

# புதிய அமைச்சரவை பேச்சாளராக பந்துல!

கொழும்பு, மே. 25

புதிய அமைச்சரவைப் பேச்சாளராக வெகுஜன ஊடகம், போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும், மூன்று இணை அமைச்சரவைப் பேச்சாளர்களை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமித்துள்ளார்.

இதன்படி, அமைச்சர் மஹிந்த அமரவீர, மனுஷ நாணயக்கார மற்றும் காஞ்சன விஜேசேகர ஆகியோர் இணை அமைச்சரவைப் பேச்சாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். (அ)

# நிதி அமைச்சு பதவி யாருக்கு?

கொழும்பு, மே. 25

நிதி அமைச்சு பதவி முக்கிய அரசியல் பிரமுகர் ஒருவருக்கு வழங்கப்படவுள்ளதென அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

சர்வக்கட்சி அரசின் அமைச்சரவை நியமிக்கப்பட்டு வந்தாலும், இன்னமும் நிதி அமைச்சு பதவிக்கு ஒருவர் நியமிக்கப்படவில்லை.

முக்கிய அரசியல் பிரமுகர் ஒருவருக்காகவே, நிதி அமைச்சு பதவி காத்திருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

சம்பிக்க ரணவக்க அல்லது ஹர்ஷ டி சில்வா ஆகிய இருவரில் ஒருவர் நிதி அமைச்சராகலாம் எனவும், அவ்வாறு இல்லாவிட்டால் தேசியப்பட்டியல் ஊடாக பிரபல வர்த்தகர் ஒருவர் உள்வாங்கப்பட்டு அவருக்கு நிதி அமைச்சு பதவி வழங்கப்படலாம் எனவும் தெரிய வருகின்றது. (அ)

# வாகனங்களுக்கு எரிபொருள் விநியோகத்துக்கு மட்டுப்பாடு!

கொழும்பு, மே. 25

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எரிபொருள் விநியோகத்தை மட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி, நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில், மோட்டார் சைக்கிள்களுக்கு 2,500 ரூபாவுக்கும், ஓட்டோக்களுக்கு 3,000 ரூபாவுக்கும் மாத்திரமே எரிபொருள் விநியோகிக்கப்படவுள்ளது.

அத்துடன், கார்கள், வான்கள் மற்றும் ஜீப் ரக வாகனங்களுக்கு, 10,000 ரூபாவுக்கு மாத்திரம் எரிபொருள் விநியோகிக்கப்படவுள்ளது.

எவ்வாறிருப்பினும், பஸ்கள், லொறிகள் உட்பட வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும் உழவு வண்டிகள் உள்ளிட்ட வாகனங்ளுக்கு இந்தக் கட்டுப்பாடுகள் அமுலாக்கப்படமாட்டாது என பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது. (அ)

# ஓட்டோ கட்டணமும் எகிறியது!

கொழும்பு, மே. 25

எரிபொருள் விலையேற்றத்தையடுத்து, போக்குவரத்து கட்டணத்தை அதிகரிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி ஓட்டோவுக்கான ஆரம்ப கட்டணமாக 100 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஓட்டோ ஆரம்பக்கட்டணம் 20 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஆரம்ப கிலோ மீற்றருக்கு அடுத்தப்படியாக, பயணிக்கும் ஒவ்வொரு கிலோமீற்றருக்கும் 80 ரூபா விதம் அறவிட தீர்மானிக்கப்பட்டுள்ளது என அகில இலங்கை ஓட்டோ சாரதிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

பாடசாலை போக்குவரத்து கட்டணம், வாடகை வண்டி சேவை உள்ளிட்ட மேலும் சில போக்குவரத்து சேவை கட்டணங்களும் எகிறவுள்ளன. (அ)

# குறைந்த வருமானத்தை பெறும் 33 இலட்சம் பேருக்கு நிவாரணம்

கொழும்பு, மே. 25

பொருள் விலையேற்றம் மற்றும் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள சமுர்த்தி பயனாளிகள் மற்றும் குறைந்த வருமானம் பெறும் 33 இலட்சம் பேருக்கு நிவாரணம் வழங்கும் திட்டத்தின் கீழ், இம்மாதம் முதல் எதிர்வரும் இரண்டு மாதங்களுக்கு மாதாந்தம் 5000 ரூபாய் முதல் 7500 ரூபாய் வரையிலான நிதியுதவியை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, 17 இலட்சத்து 65 ஆயிரம் சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்கள், 7 இலட்சத்து 30 ஆயிரம் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள் மற்றும் முதியவர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் சிறுநீரக நோயாளர்களும் இந்த பலனை அனுபவிக்கும் வகையில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இத் திட்டத்தின் முதல் கட்டமாக அடுத்த வாரம் மே மாதத்துக்கான உதவித்தொகையை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

உலக வங்கியிடமிருந்து பெறப்பட்ட 300 மில்லியன் அமெரிக்க டொலர்களில் ஒரு பகுதியைப் பயன்படுத்தி பயனாளிகளுக்கு மூன்று மாத காலத்திற்கு நிவாரணம் வழங்க இலங்கை அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

பிரதமர் அலுவலகம் மற்றும் நிதி அமைச்சின் பணிப்புரையின் பேரில் நடைமுறைப்படுத்தப்படும் இந்த வேலைத்திட்டத்தை வழிநடத்துவதில் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களமும் முக்கிய பங்காற்றுகின்றது.

இதன்படி, சமுர்த்தி உதவி பெறுகின்ற குடும்பங்கள் உட்பட அனைத்து பயனாளி களின் குடும்பங்களுக்கும் மாதாந்த கொடுப்பனவை நேரடியாக அவர்களது சொந்த வங்கிக் கணக்கில் வைப்பீடு செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சமுர்த்தி உதவி பெறும் குடும்ப உறுப்பினர்களுக்கு குறைந்தபட்சம் ரூ. 5000 முதல் 7,500 வரை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக சமுர்த்தி பணிப்பாளர் நாயகம் பந்துல திலகசிறி தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும் இயங்கி வரும் சமுர்த்தி வங்கிகள் ஊடாக பணத்தை பெறுவதற்கு அவர்களுக்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. (அ)

# 600 லீற்றர் எரிபொருள் பதுக்கியவர் சிக்கினார்

கொழும்பு, மே. 25

600 லீற்றர் எரிபொருளை சட்டவிரோதமான முறையில் பதுக்கி வைத்திருந்த ஒருவர் மாத்தறையில் கைது செய்யப்பட்டதாக அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

மேலும், சட்டவிரோதமாக எரிபொருளை பதுக்கி வைத்து மீள் விற்பனை செய்யப்படுவது தொடர்பாக நாடளாவிய ரீதியில் சுற்றிவளைப்புக்கள் இடம்பெறுகின்றன.

மீள் விற்பனை நோக்கத்திற்காக ஓட்டோக்கள் உள்ளிட்ட வாகனங்கள் எரிபொருளை பெற்றுக்கொள்ள மீண்டும் மீண்டும் எரிபொருள் நிலையங்களில் நிற்பதை அவதானிக்க முடிந்ததாகவும் அமைச்சர் காஞ்சன விஜேசேகர கூறினார். (அ)

# தமிழ்நாடு வழங்கிய நிவாரணத்தில் 20,000 பொதிகள் கிளிநொச்சிக்கு!

கிளிநொச்சி, மே. 25

இலங்கையில் உள்ள குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு இந்தியா வழங்கும் நிவாரணப் பொதியில் இருந்து 20,000 பொதிகளை கிளிநொச்சி பிரதேச மக்களுக்கு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக கிளிநொச்சி அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

தமிழ்நாட்டு மக்களால் வழங்கப்படும் இந்த நிவாரணப் பொதியில் சுமார் 40 மில்லியன் உணவுப் பொட்டலங்கள் அடங்கியுள்ளதுடன், கிளிநொச்சி மக்களின் பொருளாதார வறுமை குறித்து அரசாங்கம் முன்னரே உணர்ந்துகொண்டதன் விளைவாக 20,000 குடும்பங்களுக்கு நிவாரணப் பொதி வழங்கப்படவுள்ளதாக அரசாங்க அதிபர் கூறினார்.

இந்த நிவாரணப் பொதிகளை வழங்குவதற்கு பொருத்தமான நபர்களைத் தெரிவு செய்யும்




நடவடிக்கைகள் கிராம மட்டத்தில் நடைபெற்று வருவதாகவும் பொருத்தமான குடும்பங்களைத் தெரிவு செய்வதற்காக கிராம மட்டத்தில் முன்மொழிபவர்கள் மற்றும் அரச அதிகாரிகள் அடங்கிய விசேட குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி அரசாங்க அதிபர் தெரிவித்தார். (அ)

# எரிபொருள் கொள்வனவு குறித்து ரஷ்யாவுடன் அரசு பேச்சுவார்த்தை

கொழும்பு, மே 25

எரிபொருள் கொள்வனவு தொடர்பாக ரஷ்யாவுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாகவும் ஆனால் ரஷ்யாவிடம் இருந்து இதுவரை எந்த பதிலும் வரவில்லை எனவும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஜனாதிபதி தனிப்பட்ட முறையில் பேசியதாக அமைச்சர் கூறியுள்ளார்.

ரஷ்யா உட்பட வேறு எந்த நாட்டிலிருந்தும் குறைந்த விலையில் எரிபொருளை பெற்றுக்கொள்ள வாய்ப்பு கிடைத்தால், அதற்காக பாடுபடுவேன் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (அ)

# பதவியை துறக்கவில்லை என்கிறார் ஜகத் அல்விஸ்!



கொழும்பு, மே. 25

பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) ஜகத் அல்விஸ் தனது ராஜினாமா கடிதத்தை நேற்று முன் தினம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளித்ததாக வெளியான செய்தியை அவர் நிராகரித்துள்ளார்.

தான் இதுவரை பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பதவியை ராஜினாமா செய்யவில்லை என்றும் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், பொது மக்கள் பாதுகாப்புத்துறைக்கு புதிய அமைச்சர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதால், அந்த அமைச்சுக்கு வேறு ஒரு செயலாளரை நியமிப்பதற்கான வாய்ப்புள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் வாக்குமூலம் பதிவு செய்த சில மணி நேரங்களிலேயே பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பதவியில் இருந்து மேஜர் ஜெனரல் ஜகத் அல்விஸ் ராஜினாமா செய்து விட்டதாக தகவல்கள் வெளியாகி இருந்தது குறிப்பிடத்தக்கது. (அ)

# 21ஆவது திருத்தத்தை விரும்பியபடி கொண்டு வருவதற்கு அரசு முயற்சி

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு

கொழும்பு, மே. 25

**சர்வஜன வாக்கெடுப்புக்கு மாறாக அரசியலமைப்பின் 21வது திருத்தத்தை தாம் விரும்பியவாறு கொண்டுவர இந்த அரசாங்கம் முயற்சிக்கின்றது என சஜித் பிரேமதாஸ குற்றம் சாட்டியுள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிக்கவும், 19 ஆவது திருத்தத்தை வலுப்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு 20 ஆவது திருத்தத்தை இரத்து செய்யவும், ஆணைக்குழுக்களை சுயாதீனமாக்கும் முயற்சிகளையும் அரசாங்கம் கைவிடக் கூடாது.

அரசாங்கத்தின் மோசடி நடவடிக்கைகள் நிறுத்தப்படவேண்டும்-என்றார். (அ)



# இலங்கை குறித்து எதிர்மறையான பிம்பம் சுற்றுலாப் பயணிகள் வருகையில் வீழ்ச்சி

கொழும்பு, மே. 25

சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைவடைந்துள்ளதாக சுற்றுலா ஊக்குவிப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

மார்ச் மாதத்துக்குப் பின்னர் நாட்டில் அமைதி காணாமல்போயுள்ள நிலையில், வெளிநாட்டவர்கள் மத்தியில் இலங்கை தொடர்பில் எதிர்மறையான பிம்பத்தை ஏற்படுத்தியமையினால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அந்த சபை குறிப்பிட்டுள்ளது.

எனவே ஓகஸ்ட் மற்றும் டிசெம்பர் மாதங்களில் இலங்கைக்கு அதிகளவான சுற்றுலாப் பயணிகளை வரவழைக்கும் வகையில் விசேட வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவது அவசியமானது என சுற்றுலா ஊக்குவிப்பு அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் தம்மிக்க விஜேசிங்க தெரிவித்தார். (அ)

# மண்ணெண்ணெய் விநியோகத்துக்காக தனியான எரிபொருள் நிரப்பு நிலையம்

கொழும்பு, மே. 25

மண்ணெண்ணெய் மாத்திரம் விநியோகம் செய்வதற்கான நிரப்பு நிலையங்களை உருவாக்குவது தொடர்பில் அரசாங்கம் அவதானம் செலுத்தி வருவதாக எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இதனூடாக, பெருந்தோட்ட தொழிலாளர்கள் மற்றும் மீனவர்களுக்கு இலகுவாக மண்ணெண்ணெய் பெற்றுக்கொள்ள முடியுமெனவும் அவர் கூறினார்.

இதனை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது குறித்து தற்போது திட்டமிடப்பட்டு வருவதாகவும் எரிசக்தி அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

# தற்போதைய நிதிமையச்சர் ஜனாதிபதி கோட்டாபயவே!

## அமைச்சர் காஞ்சன தெரிவிப்பு



கொழும்பு, மே. 25

புதிய நிதி அமைச்சர் தொடர்பான முடிவுகளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவே எடுப்பர் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

தற்போது பதில் நிதிமையச்சராக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவே செயற்படுகின்றார் என அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் தற்போது இடம்பெற்று வரும் ஊடக சந்திப்பிலேயே அமைச்சர் காஞ்சன விஜேசேகர இதனை குறிப்பிட்டார். (அ)

# கட்சி அரசியலாலேயே நாசமடைந்துள்ளது நாடு

## வேலுகுமார் சுட்டிக்காட்டு

கொழும்பு, மே 25

“நாட்டின் இன்றைய நிலைமைக்கு, கட்சியை முன்னிலைப் படுத்திய அரசியலின் தோல்வியே காரணமாகும்.” என கண்டியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

எமது நாடு சுதந்திரம் அடைந்ததிலிருந்து முன்னெடுக்கப்பட்ட அரசியல் செயற்பாடுகளின் தோல்வி இன்று முழு மொத்தமாக வெளிப்படுகின்றது. இலங்கையின் அரசியலில் பெரும்பான்மை சார்ந்த தேசிய கட்சிகள் பிரதான இடம் வகித்து வந்துள்ளது. அதே போன்று, இனங்கள் சார்ந்ததாகவும், பிராந்தியங்கள் சார்ந்ததாகவும், சிறுபான்மை கட்சிகள் உருவாகி இருக்கின் றன. அதற்கு மேலதிகமாக பல சிறு கட்சிகளின் செயற்பாடுகளும் இருக்கின்றது. இன்றைய நாட்டின் நிலைமைக்கு, கட் சியை முன்னிலைப்படுத்திய அரசியலின் தோல்வியே காரணமாகும்.

நாட்டுக்கென தேசிய கொள்கை திட்டம் ஒன்றை வகுத்து, அதற்கமைய தூர நோக் குடன் எச்செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படவில்லை. நாட் டுக்கென தேசிய கொள்கை ஒன்று இருக்கின்றதா? என கேட்டால், இல்லை என்பதே உண்மையாகும். மாறாக அரசியல் கட்சிகள் தமக்கென கொள்கைகளை வகுத்துக் கொண்டு, அவற்றையே முன் னிலைப்படுத்தி செயற்பட்ட னர். காலத்திற்கு காலம் ஆட்சி மாற்றம் இடம்பெறுகின்றபோது, கொள்கையும், செயற்பாடுகளும் மாற்றமடைந்தது. அது மட்டுமல்லாது, ஆட்சிய மைப்பதற்காக கூட்டு சேரும் கட்சிகளின் நிபந்தனைகளுக்கு ஏற்பவும், விருப்பு வெறுப்புக ளுக்கு ஏற்பவும், கொள்கைகள், செயற்பாடுகள் மாற்றம் அடைந்தன. இவையனைத்தும் எமது நாட்டுக்கென நிலையான ஒரு கொள்கை வேலை திட்டம் இருக்கவில்லை என்பதையே மீண்டும் காட்டுகின்றது.என்றார். (அ)

# யாழில் 1 வருடமாக திருட்டில் ஈடுபட்டு வந்தவர் சிக்கினார்!

யாழ்ப்பாணம், மே. 25

யாழில் கடந்த ஒரு வருட காலத்தில் 6 வீடுகளில் திருட்டில் ஈடுபட்ட நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் அரியாலை பூம்புகார் பகுதியை சேர்ந்த 36 வயதுடைய நபர் ஒருவரே யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கீழ் இயங்கும் மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினரால் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டார்.

புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த நபரை கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்தபோது , கடந்த 2021ஆம் ஆண்டு மற்றும் 2022ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட கால பகுதியில் 6 வீடுகளில் தான் தங்க நகைகள், பணம் என்பவற்றை களவாடியதாக தெரிவித்துள்ளார்.



சந்தேக நபரின் வாக்கு மூலத்தின் அடிப்படையில் ஒரு தொகை நகை மற்றும் பணம் என்பவற்றை மீட்டுள்ளதாகவும் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ-03)

# எரிசக்தி நெருக்கடியை சமாளிப்பதற்கு வீட்டிலிருந்து வேலை செய்ய ஊக்குவிப்பு

கொழும்பு, மே. 25

எரிசக்தி நெருக்கடியை சமாளிக்க வீட்டிலிருந்து வேலை செய்வது ஊக்குவிக்கப்படுவதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

எரிபொருளின் பயன்பாட்டைக் குறைக்கவும் நேற்று செவ்வாய்க்கிழமை முதல் வீட்டிலிருந்து வேலை செய்வது ஊக்குவிக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

அத்தியாவசியமற்ற ஊழியர்களை வீட்டிலிருந்து வேலை செய்ய அனுமதிக்குமாறு அரச நிறுவனங்களுக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# புட்டினின் இராணுவவாதத்துக்கு எதிராக பாதுகாப்பு தேடும் அயல்நாடுகள்

♦ ஸ்பார்ட்டகஸ்



ரஷ்யா அதன் அயலகத்தில் அமெரிக்கா தலைமையிலான வட அத்திலாந்திக் உடன்படிக்கை நாடுகள் அமைப்பின் (நேட்டோ) விரிவாக்கத்தை தடுக்கும் நோக்கிலேயே கடந்த பெப்ரவரி 24 உக்ரெய்ன் நாட்டின் மீது படையெடுத்தது. பிரமாண்டமான படைபலத்தையும் நவீனரக ஆயுதங்களையும் கொண்டிருக்கின்ற போதிலும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் ஆரம்பத்தில் நினைத்ததைப் போன்று உக்ரெயினை எளிதில் வெற்றிகொள்ள முடியவில்லை. இரண்டரை மாதங்களுக்கும் மேலாக போர் தொடர்கிறது. அமெரிக்கா மற்றும் மேற்குலக நாடுகளின் பெருமளவு ஆயுத உதவியுடன் உக்ரெய்ன் படைகள் ரஷ்யர்களை கடுமையாக எதிர்த்துப் போரிட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

உக்ரெய்ன் மீதான ஆக்கிரமிப்பு அதன் நோக்கத்தை சாதிப்பதற்கு பதிலாக ரஷ்யாவின் வேறு அயல் நாடுகளையும் நேட்டோ இராணுவக் கூட்டணியை நாடுவதற்கே நிர்ப்பந்தித்திருக்கிறது. அந்த நாடுகள் புட்டினின் இராணுவவாதத்துக்கு எதிராக பாதுகாப்பைத் தேடுவதில் இறங்கியிருக்கின்றன.

இரண்டாவது உலகமகா யுத்தத்துக்கு பிறகு நடுநிலைப் போக்கை கடைப்பிடித்துவரும் பின்லாந்து நேட்டோ உறுப்புரிமைக்கு விண்ணப்பிக்க உத்தேசம் கொண்டுள்ளது. அந்நாட்டின் ஜனாதிபதியும் பிரதமரும் தாமதமின்றி நேட்டோவில் சேருவதற்கு விண்ணப்பிக்கும் என்று கடந்தவாரம் நம்பிக்கை வெளியிட்டிருக்கிறார்கள்.

அதேவேளை, சுவீடன் நேட்டோ உறுப்புரிமை பால்டிக் மற்றும் நோர்டிக் பிராந்தியங்களில் அதன் தேசிய பாதுகாப்பையும் உறுதிப்பாட்டையும் வலுப்படுத்தும் என்று கூறியிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. சுமார் 200 வருடங்களாக இராணுவக்கூட்டணிகளில் அங்கம் வகிக்காமல் ஒதுங்கியிருந்து வந்திருக்கும் நாடு சுவீடன். அதன் சமூக ஜனநாயக சிறுபான்மை அரசாங்கம் இவ்வாரம் நேட்டோ உறுப்புரிமைக்கு விண்ணப்பிப்பதற்கு முறைப் படியான தீர்மானத்தை எடுத்திருக்கிறது. பாதுகாப்புக் கொள்கை தொடர்பாக பாராளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தை தொடர்ந்து கருத்து தெரி வித்த சுவீடனின் பிரதமர் மக்டலீனா அண்டர்சன் “நேட்டோவில் இணைவதற்கு பாராளு மன்றத்தில் பரந்தளவு பெரும்பான்மை ஆதரவு இருக்கிறது. நேட்டோவில் இணைவதே சுவீடனுக்கும் அதன் மக்களுக்கும் நல்லது” என்று குறிப்பிட்டார்.

ரஷ்யாவின் இவ்விரு அயல்நாடுகளும் நேட்டோவில் இணைவதற்கு காட்டுகின்ற நாட்டம் வட ஐரோப்பாவின் புவிசார் அரசியல் வரைபடத்தை மீளவரையும் ஒரு முயற்சியாகும் என்று சர்வதேச அரசியல் அவதானிகள் அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்கள். அதேவேளை, நேட்டோவில் இணைந்தால் அது பரந்தளவிலான விளைவுகளைக்கொண்டுவரும் என்று ரஷ்யா எச்சரிக்கத் தவறவுமில்லை.

> ரஷ்யாவின் இவ்விரு அயல்நாடுகளும் நேட்டோவில் இணைவதற்கு காட்டுகின்ற நாட்டம் வட ஐரோப்பாவின் புவிசார் அரசியல் வரைபடத்தை மீளவரையும் ஒரு முயற்சியாகும் என்று சர்வதேச அரசியல் அவதானிகள் அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்கள். அதேவேளை, நேட்டோவில் இணைந்தால் அது பரந்தளவிலான விளைவுகளைக் கொண்டு வரும் என்று ரஷ்யா எச்சரிக்கத் தவறவுமில்லை.

## பின்லாந்தும் சுவீடனும் நேட்டோவில் இணைவதில் நாட்டம்




பின்லாந்தும் சுவீடனும் நேட்டோவில் சேருவதற்கு முறைப்படி விண்ணப்பித்தால், அது நேட்டோவை பலவீனப்படுத்துவதையே தனது வெளியுறவுக் கொள்கையின் முக்கியமான இலக்காகக் கொண்டி ருக்கும் ரஷ்ய ஜனாதிபதி புட்டினுக்கு மிகப்பெரிய பின்னடைவாக அமையும். குறிப்பாக, ரஷ்யாவுடன் பகைமையான கடந்த காலத்தைக் கொண்டிருக்கும் பின்லாந்து நேட்டோவில் சேருவதே புட்டினுக்கு ஆபத்தானது. பின்லாந்தின் பல பிராந்தியங்கள் சோவியத் யூனியனுக்கு வரவேண்டியவை என்று கோரி அதிபர் ஜோசப் ஸ்டாலின் 1939 ஆம் ஆண்டில் அந்நாட்டின் மீது படையெடுத்தார். ஆரம்பக்கட்டத்தில் செஞ்சேனை கடுமையாக சண்டையிட வேண்டியிருந்த போதிலும், மாஸ்கோவுடன் சமாதான உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட அது பின்லாந்தை நிர்ப்பந்தித்தது. அந்த உடன்படிக்கையின் கீழ் பின்லாந்து அதன் பரப்பளவில் சுமார் 9 சதவீதத்தை விட்டுக்கொடுத்தது. ஆனால் ஒரு வரு டம் கழித்து ஜேர்மன் நாஸிகளுடன் சேர்ந்து பின்லாந்து சோவியத் துருப்புக்களைத் தாக்கியது. இரண்டாவது உலக மகா யுத்தத்தில் நாஸிகள் தோற்கடிக்கப்பட்டதையடுத்து பின்லாந்துக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான 1340 கிலோ மீட்டர் எல்லையோரம் அமைதி நிலை நாட்டப்பட்டது. இப்போது உக்ரெய்ன் போர் பின்லாந்தினதும் சுவீடனி னதும் பாதுகாப்பு அக்கறைகளை ஆழப்படுத்தியாருக்கிறது போலத் தெரிகிறது.

உக்ரெய்ன் போரையடுத்து ஐரோப்பாவில் தோன்றியிருக்கும் நெருக்கடியான சூழ்நிலைக்கு மத்தியில் இவ்விரு நாடுகளும் விரைவாக நேட்டோவில் இணைத்துக் கொள்ளப்படுமா என்பது இன்னமும் தெளிவில்லை. நேட்டோ கூட்டணிக்குள் தீர்மானங்கள் ஏகமனதாக எடுக்கப்படுவதே வழமை. நோர்டிக் நாடுகளை நேட்டோவில் சேர்த்துக்கொள்வதற்கு துருக்கி அதன் எதிர்ப்பை ஏற்கெனவே வெளிக்காட்டியிருக்கிறது. அமெரிக்காவும் ஐக்கிய இராச் சியமும் நேட்டோ விர்வாக்கத்தை துரிதப்படுத்துவதில் நாட்டம் கொண்டிருக்கும் அதே வேளை, ஜேர்மனியும் பிரான்ஸூம் கூடுதலான அளவுக்கு எச்சரிக்கையான போக்கையே கடைப்பிடிக்கின்றன.

ரஷ்யாவுடன் ஆழமான உறவுகளைக் கொண்டிருக்கும் ஹங்கேரி ரஷ்ய எண்ணெய் இறக் குமதிகளை தடை செய்வதற்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் திட் டத்தை ஏற்கெனவே தடுத்து வைத்திருக்கிறது. அந்த நாடு நேட்டோ விரிவாக்கம் குறித்து அதன் கருத்தை தெளிவாக இன்னமும் கூறவில்லை.

ஆனால், பின்லாந்தும் சுவீடனும் நேட்டோவில் சேருவதற்கு தெரிவித்திருக்கும் விருப்பம் ஐரோப்பாவில் பதற்றத்தை தீவிரப்படுத்தியிருக்கிறது. இராணுவ மற்றும் தொழில்நுட்ப பதிலடி குறித்து ரஷ்யா எச்சரிக்கை செய்திருக்கிறது.

பொதுவில் சொல்வதானால், பின்லாந்தும் சுவீடனும் சுயாதிபத்தியம் உடைய நாடுகள். எந்த கூட்டணியிலும் இணைவது குறித்து தீர்மானங்களை எடுப்பதற்கான சுதந்திரமும் உரிமையும் அந்நாடுகளுக்கு இருக்கிறது. ஆனால் இந்த நாடுகளும் பொதுவில் ஐரோப்பாவும் முகங்கொடுக்கவேண்டிய பெரியதொரு கேள்வி இருக்கிறது. குறிப்பாக, ஐரோப்பா முதலாவது உலகமகா யுத்தத்திற்கு முன்னரான காலகட்டத்தில் நிலவிய பாதுகாப்பு போட்டாபோட்டியை ஒத்த சூழ் நிலையொன்றுக்கு முகங்கொடுத்துக் கொண்டிருக்கும் ஒரு நேரத்தில் இன்னொரு சுற்று நேட்டோ விரிவாக்கம் அந்த கண்டத்தில் அமைதியைக் கொண்டுவர உதவுமா என்பதே அக்கேள்வியாகும். அணுவாயுதங்களைக்கொண்ட ரஷ்யாவுக்கும் நேட்டோவுக்கும் இடையிலான தற்போதைய நெருக்கடியை அது மேலும் தீவிரமடையச்செய்யும் என்பதில் சந்தேகமில்லை.

ஏற்கெனவே பல சுற்றுக்கள் நேட்டோ விரிவாக்கமும் ரஷ்யாவின் பிராந்திய ஆக்கிரமிப்பும் உலகை மிகவும் பயங்கரமானதொரு நிலைக்கு கொண்டுவந்து விட்டிருக்கின்றன. 1962 கியூபா ஏவுகணை நெருக்கடிக்குப் பிறகு உலகம் எதிர்நோக்குகிற ஆபத்தான தருணமாக இன்றைய சூழ்நிலை விளங்குவதாக வர்ணிக்கப்படுகிறது.

ரஷ்யா உடனடியாக போரை நிறுத்தவேண்டும். நெருக்கடிக்கு நீண்டகால அடிப்படையிலான தீர்வொன்றைக் காண்பதற்கு அதில் சம்பந்தப்பட்ட சர்வதேச தரப்புகள் சகலதும் பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டும் என்பதே உலகில் அமைதி, சமாதானத்தை விரும்பும் சகலரினதும் வேண்டுகோளாக இருக்கிறது. இறுதியாக, அமெரிக்காவிடமும் அதன் நேட்டோ நேச நாடுகளிடமும் ஒரு கேள்வி. கெடுபிடி யுத்தம் முடிவுக்கு வந்து மூன்று தசாப்தங்களுக்கும் கூடுதலான காலம் கடந்தவிட்ட நிலையில் நேட்டோ விரிவாக்கத்துக்கு என்ன அவசியம்? நேட்டோவின் இந்த விரிவாக் கப்போக்குத்தான் உலகில் புதியதொரு கெடுபிடி யுத்தத்தை மூள வைத்திருக்கிறது.

அதற்காக உக்ரெய்ன் மீதான ரஷ்ய ஆக்கிரமிப்பு நியாயப்படுத் தக்கூடிய ஒன்றாக மாறிவிடாது. ஆனால் ரஷ்யா அதன் பாதுகாப்புக்கு நேட்டோ விரிவாக்கம் ஏற்படுத்துகின்ற அச்சுறுத்தலை காரணம் காட்டி அயல்நாடுகளை வெருட்டுவதால் ஐரோப்பாவில் பதற்றம் தொடரவே செய்யும்.

# தீவிரவாதத்துக்கான ஊக்குவிப்பா பேரறிவாளன் விடுதலை?

- கே.சந்துரு

தமிழ் மக்களால் 1971-க்குப் பிறகு முற்றிலுமாகப் புறக்கணிக்கப்பட்ட காங்கிரஸ் கட்சி மீண்டும் ஒரு கோமாளித்தனமான வேலையில் ஈடுபட்டுள்ளது. பேரறிவாளனை உச்ச நீதிமன்றம் விடுவித்த தீர்ப்புக்கு எதிராக காங்கிரஸ் தொண்டர்கள் வாயில் துணியைக் கட்டிக்கொண்டு ஒரு மணி நேரம் மௌன எதிர்ப்பு தெரிவிப்பார்கள் என்று அக்கட்சியால் வெளியிடப்பட்ட அறிவிப்பு அரசியல் அபத்தம்! இது தவிர, அவர்களது ‘செய்தித் தொடர்பாளர்’ என்ற பெயரில் இயங்கும் அமெரிக்கை நாராயணன் உதிர்க்கும் முத்துகள் யாவும் காது கொடுக்க சகித்தாவை. இந்தத் தீர்ப்பை பயங்கரவாதத்திற்கும், பணநாயகத்திற்கும் கிடைத்த வெற்றி என்று கூறியதோடு, தமிழ் மக்கள் அடைந்திருக்கும் தோல்வி என்றும் குறிப்பிட்டுள்ளார் அவர்.

**நீதிமன்றத்தின் முன்னின்ற கேள்வி**

உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து ஒரு தேசிய அரசியல் கட்சி எதிர்ப்புப் போராட்டம் நடத்துவது என்பது கேலிக்கூத்து. வேடிக்கையாகச் சொல்வார்கள், “அரசமைப்புச் சட்டத்தில் என்ன எழுதியிருந்தாலும் இறுதியில் நீதிபதிகள் சொல்வதே சட்டம்!” என்று. ஒரு கிரிமினல் வழக்கில் உச்ச நீதிமன்றம் பிறப்பிக்கும் உத்தரவே இறுதியானது என்பதை ஒரு சட்ட மாணவன் கூட உறுதிப்படுத்திவிடுவான். ஆனால், இந்தச் சிற்றறிவுகூட இல்லாமல் பொறுப்பற்ற முறையில் ஏன் இப்படி காங்கிரஸ் செயல்படுகிறது?

தற்போது நீதிமன்றத்தின் முன் எழுப்பப்பட்டிருந்த பிரச்சினையானது, ‘ராஜீவ் காந்தி கொலையில் சம்பந்தப்பட்டவர்கள் குற்றவாளிகளா அல்லது நிரபராதிகளா?’ என்பதே இல்லை. அக்கொலையில் சம்பந்தப்பட்ட நேரடிக் குற்றவாளிகள் அனைவரும் சிறப்புப் புலனாய்வுக் குழு மேற்பார்வையில் சுட்டுக் கொல்லப்பட்டுவிட்டார்கள். பின்னர் தடா சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட சிறப்பு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட குற்றவாளிகள் எவரும் இந்தக் கொலையில் நேரடிப் பங்கு வகித்தவர்கள் அல்லர். கொலைக்கும், கொலையை ஒட்டிய ரகசிய சதிக்கும் பல்வேறு வழிகளில் துணை சென்றவர்கள் என்ற முறையில்தான் அவர்களது பங்கு அவ்விசாரணையில் கொண்டுவரப்பட்டது.

தடா சட்டத்தின்படி வழக்கு விசாரணை ரகசியமாக நடத்தப்பட்டதுடன், காவல் கண்காணிப்பாளர் அந்தஸ்தில் உள்ள ஒருவர் முன் அளிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலங்களைச் சாட்சியங்களாக ஏற்றுக்கொள்வதற்கும் அச்சட்டத்தில் இடம் உண்டு. மேலும், சிறப்பு நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீட்டை உச்ச நீதிமன்றத்தில் மட்டுமே செய்ய முடியும். இப்படிப்பட்ட ஒரு கடுமையான சட்டத்தின் கீழ்தான், பல்வேறு சித்திரவதைகளுக்கு ஆட்படுத்தப்பட்ட குற்றவாளிகள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

சிறப்பு நீதிமன்றம் 26 குற்றவாளிகளுக்கு மரண தண்டனை விதித்தது எல்லோரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. கிரிமினல் வழக்குகளில் குற்றத்தில் சம்பந்தப்பட்டவர்கள் ஒவ்வொருவர் பங்கையும் தனித்தனியாக நிர்ணயித்து, அதன் அடிப்படையில் தண்டனை விதிப்பதுதான் உரிய முறை. ஆனால் அதையும் மீறி சிறப்பு நீதிமன்றம் அனைவருக்கும் மரண தண்டனை அளித்ததைப் பற்றி உச்ச நீதிமன்றத்தில் முறையிடும்போது, ‘இது நீதித் துறையே விளைவித்த கொலைக் குற்றம்’ என்று விமர்சிக்கப்பட்டது. பின்னர், இந்த மேல்முறையீட்டில் 22 பேர் மீதான கொலைத் தண்டனையை ரத்துசெய்து 4 பேருக்கு மட்டும் உறுதிசெய்தது உச்ச நீதிமன்றம்.

இந்தத் தீர்ப்பை எழுதிய நீதிபதி கே.டி. தாமஸ் பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில், நான்கு பேருக்கு கொலைத் தண்டனையை உறுதிசெய்தது தவறு என்று கருத்து தெரிவித்தார். பேரறிவாளனிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்ற சிபிஐ கண்காணிப்பாளர் தியாகராஜன், தான் ஒப்புதல் வாக்குமூலத்தை எழுதும்போது அதில் முக்கியப் பகுதி ஒன்றைத் தவிர்த்துவிட்டதாக வருத்தம் தெரிவித்தார்.

**அமைச்சரவையே பிரதானம்**

கொலைத் தண்டனை விதிக்கப்பட்ட நளினி, முருகன், பேரறிவாளன், சாந்தன் ஆகிய 4 பேரும் ஆளுநரிடம் அரசமைப்புச் சட்டம் 161ஆவது பிரிவின்படி கருணை மனுவை அளித்தனர். அன்றைய ஆளுநர் பாத்திமா பீவி அப்பதவிக்கு வருவதற்கு முன் உச்ச நீதிமன்ற நீதிபதியாகப் பணியாற்றியவர். தமிழக அமைச்சரவையின் அறிவுரையைப் பெறாமலேயே 4 பேர் கருணை மனுக்களையும் அவர் தள்ளுபடி செய்தார். அதை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. அவ்வழக்கில் அமைச்சரவையின் அறிவுரையின்றி ஆளுநர் கருணை மனுக்களைப் பரிசீலிக்க முடியாது என்று தீர்ப்பளிக்கப்பட்டதுடன், ஆளுநரின் தள்ளுபடி உத்தரவு ரத்து செய்யப்பட்டது.

அன்றைய தமிழக முதல்வர் கருணாநிதி தலைமையிலான அமைச்சரவை அம்மனுக்களைப் பரிசீலித்தது. திமுக அரசு ஏற்கெனவே விடுதலைப் புலிகள் விவகாரத்தில் மென்போக்கோடு செயல்படுவதாக அப்போது குறிவைக்கப்பட்ட நிலையில், நளினிக்கு மட்டும் மரண தண்டனையைக் குறைப்பதற்கு ஆளுநருக்கு அரசு ஆலோசனை வழங்கியது. மற்ற மூவரின் கருணை மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. இதை எதிர்த்து குடியரசுத் தலைவருக்கு மனுக்கள் அளிக்கப்பட்டன. அன்றைய குடியரசுத் தலைவராக இருந்த கே.ஆர்.நாராயணனும், அதற்குப் பின்னர் பதவிக்கு வந்த அப்துல் கலாமும் முடிவு எதுவும் எடுக்காமல் 11 ஆண்டுகள் கருணை மனுக்கள் கிடப்பில் போடப்பட்டன. அதற்குப் பின் குடியரசுத் தலைவர் பதவிக்கு வந்த பிரதீபா பாட்டீல் அம்மனுக்களைத் தள்ளுபடி செய்ததையொட்டி மரண தண்டனையை நிறைவேற்றும் நாள் நெருங்கியது. அச்சமயத்தில் தமிழக சட்டப்பேரவையில் குற்றவாளிகள் 7 பேருக்கும் மரண தண்டனையை ரத்துசெய்வதற்கு குடியரசுத் தலைவர் கருணை காட்ட வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது (2011).

சம்பந்தப்பட்டவர்கள் மீண்டும் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தனர். அவ்வழக்கு விசாரணையில் இருக்கும்போதே அம்மனுக்கள் உச்ச நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது. உச்ச நீதிமன்றம் இத்தனை ஆண்டுகளாக மரணக் கொட்டடியில் இருந்து வந்த அக்குற்றவாளிகளின் மரண தண்டனையை ரத்துசெய்து அதை ஆயுள் தண்டனையாகக் குறைத்தது (2014). இதற்குப் பின்தான் தமிழக அமைச்சரவை குற்றவாளிகள் 7 பேருக்கும் தண்டனையை ரத்து செய்து விடுதலை செய்யும்படி ஆளுநருக்கு அறிவுரை வழங்கியது.

இதையொட்டி உச்ச நீதிமன்றமும் அவர்கள் குறைந்தபட்ச தண்டனைக் காலத்தை அனுபவித்துவிட்டதனால் அவர்கள் தண்டனையைக் குறைப்பதற்கோ, மாற்றுவதற்கோ குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் நிவாரணம் பெறலாம் என்று கூறியதன் அடிப்படையில் அவர்கள் மீண்டும் ஆளுநரிடம் மனு அளித்தனர். மறுபடியும் தமிழக அமைச்சரவை ஆளுநரிடம் தண்டனையைக் குறைக்கும்படி அறிவுரை வழங்கியது.

அதற்குப் பிறகு ஆளுநர் இதுகுறித்து முடிவு எதுவும் எடுக்காததனால் மீண்டும் ஒருமுறை சென்னை உயர் நீதிமன்றத்தை அணுகினர். ஆனால், சென்னை உயர் நீதிமன்றமோ ஆளுநரின் இந்த சிறப்பு அதிகாரத்தில் தலையிட முடியாது என்று ஒதுங்கிக்கொண்டது. மறுபடியும் வழக்கு உச்ச நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. 2018ஆம் ஆண்டு தமிழக சட்டப்பேரவை மீண்டும் ஒருமுறை குற்றவாளிகளின் தண்டனையைக் குறைப்பதற்காக தீர்மானம் நிறைவேற்றியது (9.9.2018). அதே தேதியில் தமிழக அமைச்சரவை ஆளுநரிடம் குற்றவாளிகள் 7 பேருக்கும் தண்டனையை ரத்துசெய்வதற்கு ஆலோசனை வழங்கியது.



இப்படிப்பட்ட சூழ்நிலையில் அமைச்சரவையின் ஆலோசனையைப் புறக்கணித்து ஆளுநர் முடிவு எதுவும் எடுக்காமல் காலம் தள்ளி வந்ததைத்தான் தற்போது உச்ச நீதிமன்றம் குறை கூறியுள்ளது. ஆளுநர் சார்பாக வாதாடிய ஒன்றிய அரசின் வாதத்தை நிராகரித்ததுடன், அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 161இன் கீழ் கருணை காட்டும் அதிகாரத்தை ஆளுநர் தன்னிச்சையாக பயன்படுத்த முடியாது என்றும், அமைச்சரவையின் ஆலோசனை அவரைக் கட்டுப்படுத்தும் என்றும் மீண்டும் ஒருமுறை வலிறுத்தப்பட்டுள்ளது.

**சீர்திருத்துவதே தண்டனையின் நோக்கம்**

சுமார் இரண்டாரை ஆண்டுகள் கிடப்பில் போடப்பட்டிருந்த கருணை மனுக்களின் மீது மீண்டும் முடிவெடுப்பதற்காக ஆளுநரிடம் திருப்பி அனுப்பாமல், அரசமைப்புச் சட்டத்தின் 142வது பிரிவில் வழங்கப்பட்டுள்ள சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி பேரறிவாளனை விடுதலை செய்யும் உத்தரவை உச்ச நீதிமன்றமே பிறப்பித்துள்ளது வரலாற்றுச் சிறப்புமிக்கது. இதைக் கண்டித்துதான் காங்கிரஸார் குரலெழுப்பிவருகிறார்கள்.

தீவிரவாதத்துக்கு ஆதரவானது என்று கருத்து கூறியுள்ள அமெரிக்கை நாராயணன் இந்தத் தீர்ப்பில் தீவிரவாதத்திற்கு ஆதரவாக ஏதேனும் ஒரு பகுதியைச் சுட்டிக்காட்ட முடியுமா? பணநாயகம் வென்றது அவர் கூறியுள்ளது அப்பட்டமான நீதிமன்ற அவமதிப்பாகும். தமிழக மக்களுக்குத் தோல்வி என்றும் அவர் எதைக் குறிப்பிடுகிறார் என்பது தெரியவில்லை.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தீவிரவாத சட்டப் பிரிவுகளைச் சேர்ப்பதற்கு இடம் இல்லை என்று 1999ஆம் வருடத்திய மேல்முறையீட்டிலேயே உச்ச நீதிமன்றம் தீர்ப்பை வழங்கிவிட்டது. இருப்பினும் இவ்வழக்கு சம்பந்தமான பிரச்சினை எழும்போதெல்லாம் குற்றவாளிகள் தீவிரவாதத்தை ஆதரிப்பவர்கள் என்று தொடர்ச்சியான பிரச்சாரத்தைக் கட்டவிழ்த்துவிடுவது சட்ட விரோதமானது மட்டுமல்லாமல், கீழ்த்தரமான அரசியல் பிரச்சாரமாகும்.

நம் நாட்டு குற்றவியல் தண்டனையின் அடிப்படை பழிவாங்குதல் அல்லது மாறு கை - மாறு கால் வாங்குவது அல்ல. மாறாக, தண்டனை விதிக்கப்பட்ட நபர்களைச் சீர்திருத்தி மைய நீரோட்டத்தில் கொண்டுசேர்ப்பதுதான். காந்திகூட ‘கண்ணுக்குக் கண் என்ற நோக்கம் தேசத்தையே குருடாக்கிவிடும்!’ என்று கூறினார். உச்ச நீதிமன்றமும் பல தீர்ப்புகளில் இக்கருத்தை வலியுறுத்தியுள்ளது.

1978இல் திருத்தப்பட்ட குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 433-யு கீழ் மரண தண்டனை பெற்ற குற்றவாளி 14 ஆண்டுகள் சிறைத் தண்டனையை அனுபவித்துவிட்டால் தண்டனைக் குறைப்பு பற்றி அரசு பரிசீலிக்கலாம் என்றுதான் கூறப்பட்டுள்ளது. அப்படியானால் 30 ஆண்டுகள் சிறைத் தண்டனையைக் கழித்துவிட்ட 7 குற்றவாளிகளின் தண்டனையையும் ஏன் மாநில அரசு குறைக்கக் கூடாது என்கிற கேள்விதான் மேலோங்கி நிற்கும்.

**ஆளுநரின் ஆதிகார வரையறை?**

கிரிமினல் சட்டத்தில் குற்றமிழைத்தவர்கள் மீது உரிய தண்டனை வழங்கிய பின் அவர்களுக்கு சட்டத்திலுள்ள சலுகைகள் வழங்குவதை அரசியலாக்குவதை நிறுத்திக்கொள்ள வேண்டும். கடந்த 30 வருடங்களாக ஒன்றிய அரசில் பதவி வகித்த காங்கிரஸ் கட்சியும், பாஜக கட்சியும் இப்பிரச்சனையில் ஒரே நிலைப்பாட்டைக் கடைப்பிடித்துவருவது அவர்களைத் தமிழக அரசியலிலிருந்து மேலும் வெளித்தள்ளிக்கொள்ளவே வழிவகுக்கும். குற்றங்களுக்கான தண்டனை தொடர்பில் சட்டங்கள் தெளிவாக இருக்கும்போது, அதையும் மீறி இத்துணைக் கண்டத்தின் அரசியலை முன்வைத்து தண்டனைகளை நிறைவேற்ற முயல்வது கிரிமினல் சட்ட முறைக்கே விரோதமானது.

கொலை வழக்கில் தண்டனை பெற்றவர்கள் அனைவரும் சட்டத்திலுள்ள குறைந்தபட்ச சிறைத் தண்டனைக்கு மீறி மேலும் ஒரு பங்கு சட்டப் போராட்ட காலத்தில் சிறையிலேயே கழிக்க வேண்டிய நிர்ப்பந்தம் உண்மையிலேயே ஒரு கேவலமான சூழ்நிலையை உருவாக்கியுள்ளது.

இவ்வழக்கில் தீர்ப்பளித்த நீதிபதி நாகேஸ்வரராவ் ஜெயலலிதா அரசு சிறப்பு வக்கீலாக பல பொடா வழக்குகளில் மறு ஆய்வுக் குழு முன்னால் ஆஜராகி வாதிட்டவர். தமிழ்நாட்டில் தேசிய அமைப்புகளைச் சேர்ந்த நெடுமாறன், வைகோ போன்ற தலைவர்களைப் பொடா சட்டத்தின் கீழ் போடப்பட்ட வழக்குகள் நியாயம் என்று வாதாடியவர். அவருக்கு இந்த மாநிலத்தின் அரசியல் பின்னணி அத்துப்படி. இருப்பினும், சட்ட நியாயங்கள் கருதி சிறப்பான தீர்ப்பொன்றை அவர் அளித்துள்ளது வரவேற்கத்தக்கது.

ஆளுநரின் அதிகார வரையறை என்ன என்பதையும், அவர் அமைச்சரவையின் முடிவுக்குக் கட்டுப்பட்டவர் என்பதையும் வலியுறுத்திய அவரது தீர்ப்பு இன்றைய ஒன்றிய அரசுக்கும், இங்குள்ள பாஜகவினருக்கும் வேப்பங்காயாக இருக்கலாம். ஆனால், அதுதான் அரசமைப்புச் சட்டத்தின் உண்மையான நோக்கம் என்பதை அவர்கள் உணர வேண்டும்.


அது மட்டுமின்றி, மற்ற 6 குற்றவாளிகளுக்கும் மனத்தடையை அகற்றி சட்ட வரையறையுடன் செயல்பட்டு மன்னிப்பு அதிகாரத்தின் மூலம் தண்டனையை ரத்துசெய்தால் அவர்களை ‘திருந்திய மனிதர்கள்’ என்று கருத இடம் உண்டு. மீறினால் மீண்டும் குட்டு வைப்பதற்கு இருக்கவே இருக்கிறது உச்ச நீதிமன்றம்!

**(கட்டுரையாளர் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி)**

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

**18)** 

i) இத் திண்ம உருவில் எத்தனை முகங்கள் உள்ளன? ................................

ii) இத் திண்ம உருவில் எத்தனை உச்சிகள் உள்ளன? ................................

**19)**  நிறந் தீட்டப்பட்ட பகுதியைப் பின்னமாக எழுதுக.

..........................................

**20)** தரப்பட்ட எண் கோலங்களில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.

i) 122 , 124 , 126 , ............. , ...........     ii) 18 , 15 , 12 , ............. , ...........

**21)** | 3, 9, 14, 6, 10, 12, | பெட்டிக்குள் உள்ள எண்களில் மூன்றின் மடங்குகளைத் தெரிவு செய்து ஒழுங்கு முறையில் எழுதுக.

.....................................................................

**22)** ஒரு பழக்கூடையில் 620 அப்பிள் பழங்களும் 125 மாம்பழங்களும் உண்டு. கூடையில் உள்ள மொத்தப் பழங்களின் எண்ணிக்கையை எழுதுக.

.....................................................................................

**23)** ஒரு கிளையில் 480 பூக்கள் மலர்ந்திருந்தன. அவற்றில் 25 பூக்களைப் பறித்தெடுத்தால் கிளையில் எஞ்சியிருக்கும் பூக்களின் எண்ணிக்கை யாது?

..............................................................

**24)** பழப்பாகுப் போத்தல் ஒன்றில் 3*l* 300*ml* பானம் அடங்கியுள்ளது. அதனை 3 மாணவர்களிடையே சமமாகப் பகிரப்பட்டதெனின் ஒருவருக்குக் கிடைத்த பான அளவு யாது?

..............................................................

**25)** 500g சீனியின் விலை ரூபா 48.00 எனின் 1500g சீனியின் விலை யாது? ....................................................

**26)** **பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.**

| பொருள் | வாங்கிய அளவு | ஒரு கிலோகிராமின் விலை | | பெறுமதி | |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | சதம் | ரூபா | சதம் |
| பருப்பு | 2kg | 95 | 00 i) | ............ | ......... |
| தேயிலை | 500g | 200 | 00 ii) | ............ | ......... |
| | | மொத்தப்பணம் | | ............ | ......... |

**27)** கடிகார முகத்தில் பி.ப. 3.30 மணி காட்டுகின்றது. கடிகாரம் காட்டும் நேரத்தை நியம நேரத்தில் எழுதுக.

.....................................................

**28)** 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?

**28)** 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?



.....................................................

**29)** ஒரு பூங்கொத்தில் மூன்று பூக்கள் வீதம் 12 பூங்கொத்துக்களில் எத்தனை பூக்கள் உள்ளன?

.....................................................     (30 புள்ளிகள்)

❖ **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தெ செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

**30)** சூரிய நமஸ்காரத்தின் நான்காம் படிநிலை எது?

1)      2)      3) 

**31)** வடமாகாணத்தில் அமைந்துள்ள குளம்
1) அபயவாவி     2) இரணைமடுக்குளம்     3) பராக்கிரமபாகு சமுத்திரம்

**32)** உள் மூச்சு வாங்குதல் வெளி மூச்சு விடுதல் என்பது மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்ட எந்த படிமுறை ஆகும்?
1) திடசித்தம்     2) உதிப்பு     3) உடலைத் தளர்த்தல்

**33)** தேசிய இலச்சினையின் பூவிதழ் வட்டத்தின் மத்தியில் இருப்பது எது?
1) சூரியன்     2) வாளேந்திய சிங்கம்     3) நெற்கதிர்

**34)** பிரித்தானியர்களால் முழுமையாக இலங்கை கைப்பற்றப்பட்ட ஆண்டு எது?
1) 1976     2) 1851     3) 1815

**35)** வருடத்தின் முதல் மாதமும் இறுதி மாதமும் பூக்கும் பூக்கள் எவை?
1) இறப்பர், வேம்பு     2) இறப்பர், தாழம்பூ     3) பிறைப்பூ, நாவல்

## விடைகள்

**18.** 1) 6   2) 8     **19.** $\frac{3}{10}$
**20.** 1) 128, 130     2) 9, 6
**21.** 3, 6, 9, 12
**22.** 745     **23.** 455
**24.** 1l 100ml / 1100ml     **25.** ரூபாய் 144.00
**26.** 1) 190   2) 100   3) 290
**27.** 15 : 30     **28.** 5m 50cm / 550cm
**29.** 36 பூக்கள்
**30.** 1     **31.** 2     **32.** 3
**33.** 2     **34.** 3     **35.** 2

### CHANNEL-1

**25.05.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

### CHANNEL - 2

**25.05.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

## எட்டு பேருக்கு அழைப்பாணை

அம்பாறை, மே. 25

கல்முனை மாநகர பிரதேசங்களில் தொடர்ச்சியாக துர்நாற்றம் வீசுகின்றமை தொடர்பில் 8 பேருக்கு எதிராக கல்முனை நீதவான் நீதிமன்றினால் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய துர்நாற்றம் வீசுவதற்கான காரணங்களை இதுவரை கண்டறிந்து எந்த நடவடிக்கையும் எடுக்காமை தொடர்பில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஐ.எல்.எம். றிபாஸ், சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் யூ.எல்.எம். நியாஸ் , கல்முனை மாநகர பிரதம சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.ஜே.கே.எம் அர்சத் காரியப்பர், கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் முஹம்மத் அஸ்மி, கல்முனை மாநகர சபை விலங்கு வைத்தியர் வெட்டபொல , கல்முனை மாநகர ஆணை யாளர் எம்.சி. அன்சார், அம்பாறை மத்திய சுற்றாடல் அதிகார சபையின் மாவட்ட உதவிப் பணிப்பாளர் மற்றும் குறித்த விடயம் தொடர்பில் சில செய்திகளை எழுதிய பிராந் திய ஊடகவியலாளர் ஆகியோருக்கே இந்த அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது மேற்படி 8 பேரையும் எதிர்வரும் ஜூன் 6ஆம் திகதி மன்றில் ஆஜராகுமாறு நீதவான் உத்தரவிட்டார்.

முறைப்பாட்டாளர் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணிகளான ஆரிப் சம்சுதீன், எம்.எஸ்.ரஸாக் , சட்டத்தரணிகளான ஜாவீட் ஜெமீல் ,அனோஜ் பிரதெஸ் ,அப்துல் கரீம் அகமட் றிப்கான் ஆகியோர் மன்றில் ஆஜராகினர். (அ)

# தமக்கே உரித்தான அடையாளங்களை தொலைத்துள்ள மட்டக்களப்பு சமூகம்!

## மாநகரசபை முதல்வர் சரவணபவன் கவலை

மட்டக்களப்பு, மே. 25

**தமது அடையாளங்களை தொலைத்துநிற்கும் சமூகமாகவே மட்டக்களப்பு சமூகத்தை பார்ப்பதாக மட்டக்களப்பு மாநகரசபையின் முதல்வர் தி.சரவணபவன் தெரிவித்தார்.**

தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டின் ஒன்றாக கருதப்படும் கபடி விளையாட்டின் முக்கியத்துவத்தையும் அதன் தமிழர் பண்பாட்டையும் வெளிப்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்ட பாடல் நேற்று முன் தினம் மட்டக்களப்பில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட கபடி சங்கத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மாநகரசபையில் இந்த நிகழ்வு நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட கபடிச் சங்கத்தின் தலைவரும் மாநகரசபை உறுப்பினருமான துரைசிங்கம் மதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதிகளாக மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தி.சரவணபவன், மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரும் சிப்ஸ் சினிமா பணிப்பாளருமான டாக்டர் க.சுகுணன் ஆகியோரும் மட்டக்களப்பு மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் ஈஸ்பரன் சிறப்பு அதிதியாகவும் கலந்து சிறப்பித்தனர்.

இலங்கை தேசிய கபடி அணி உட்பட இலங்கையின் பல கபடி அணிகளில் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த பல வீரர்கள் சாதனை படைத்துவரும் நிலையில் மட்டக்களப்புக்கும் கிழக்கு மாகாணத்துக்கும் பெருமை சேர்த்த குறித்த வீரர்களைக் கொண்டதாக பாடல் உருவாக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மண்ணைச் சேர்ந்த புகழ்மிக்க துள்ளிசை பாடகர்களான க.கஜிந்தன், ஜி.ரதியன் ஆகியோரால் பாடப்பட்டு, இசையமைக்கப்பட்டு இந்த பாடல் உருவாக்கப்பட்டுள்ளதுடன் கபடி விளையாட்டின் முக்கியத்துவம் அதன் தமிழர்கள் பண்பாடு மற்றும் தமிழர்களின் வீரத்தினை பறைசாற்றும் வகையில் பாடல் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் கபடி அணி வீரர்கள், மட்டக்களப்பு மாவட்ட கபடி சங்க



உறுப்பினர்கள், கபடி ஆர்வலர்கள் என பல தரப்பட்டவர்களும் கலந்துகொண்டனர்.

இலங்கை தேசிய கபடி அணியின் 12 வீரர்களுள் 4 பேரை மட்டக்களப்பு வழங்கியுள்ளதுடன் இலங்கை தேசிய கபடி நிர்வாகத்திலும் செயலாளரை மட்டக்களப்பு கொண்டுள்ளது. இலங்கை கபடி அணி கடந்த மாதம் பங்களாதேஷ் நாட்டில் இடம்பெற்ற ஆசிய அணிகளுக்கான கபடிப் போட்டியில் மூன்றாவது இடத்தை பெற்று வெற்றிக்கிண்ணத்தையும் சுவீகரித்தபோது மட்டக்களப்பு வீரர் ஒருவரே சிறந்த வீரராகவும் தெரிவு செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதன்போது கருத்து தெரிவித்த மாநகர முதல்வர்-

இலங்கையில் மட்டக்களப்பிலும் பல இராசதானிகள் இருந்துள்ளன. தங்களது அடையாளத்தை தொலைத்து நிற்கும் சமூகமாகவே நான் என்னை பார்க்கின்றேன். ஆவனப்படுத்தலில் நாங்கள் ஆர்வம் செலுத்தாமையே எமது வரலாறுகள் முன்கொண்டு செல்லப்படாததற்கு காரணமாகும்.

காந்தி பூங்காவில் முப்பரிபான அரங்கை அமைத்து மட்டக்களப்பில் இருந்த இராசதானிகள் தொடர்பில் சிறிய அளவிலான குறுந்திரைப்படங்களை உருவாக்கி அதனை இளம் சமூகத்தின் மத்தியில் கொண்டுசெல்வதற்கான திட்டம் உள்ளது.

படுவான்கரைப் பகுதியில் பல குடிகள் உள்ளன. அந்த ஒவ்வொரு குடியும் ஒவ்வொரு இராசாக்களைக்கொண்டுள்ளது. அவை மழுங்கடிக்கப்பட்டு எமது நினைவுச்சின்னங்களை நாங்களே அழித்து எதுவும் இல்லாத நிலையே உள்ளது. இன்று ஈரளக்குளம் பகுதியில் பழைய கோட்டைகள் உள்ளன. ஆனால் அதனை ஆண்டவர்கள் யார் என்று தெரியாது. காடுகளில் பல இடங்களில் கோட்டைகள் உள்ளது. ஆனால் வரலாறுகள் இல்லை. அதனால் சிறியளவில் ஆய்வுகள் செய்து அவற்றை குறுந்திரைப்படங்களாக மாற்றி மக்கள் மத்தியில் வரலாறை கொண்டு செல்லவேண்டும்.

நாங்கள் வரலாறுகளை இன்றைய சந்ததிக்கு கொண்டு செல்லவேண்டும். இன்று எமது போராட்டத்தை அழித்தவர்களுக்கும் வாக்களிக்கின்றோம், அதற்கு துணைநின்றவர்களுக்கும் வாக்களிக்கின்றோம். அதற்கு காரணம் எமது சரித்திரமும் தெரியாது, வலியும் தெரியாது-என்றார். (அ)

# எரிவாயு வழங்குமாறு கோரி மட்டக்களப்பில் போராட்டம்

மட்டக்களப்பு, மே. 25

மட்டக்களப்பு நகரில் பயினியர் வீதியில் எரிவாயு கோரி நேற்று முன்தினம் பிற்பகல் லொறியை மறித்து மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த வெள்ளிக்கிழமை எரிவாயுவை பெறுவதற்காக சுமார் 800 பேர் பயினியர் வீதியில் வரிசையில் காத்திருந்தனர். அவர்களில் 400 பேருக்கு அன்றைய தினம் எரிவாயு வழங்கப்பட்டது.

வரிசையில் காத்திருந்த ஏனையவர்கள், எரிவாயுவை பெறாது தொடர்ந்து மாலை வரை காத்திருந்து வீடுகளுக்குச் சென்றனர்.

மறுநாள் சனிக்கிழமை எரிவாயு வழங்கப்படுமென அதிகாலை 3 மணி தொடக்கம் வீதியில் வெற்றுச் சிலிண்டர்களுடன் மக்கள் காத்திருந்தனர். ஆனால், அன்றும் எரிவாயு வழங்கப்படாதையடுத்து, தொடர்ந்து இரவு - பகலாக நேற்று முன் தினம் வரை மக்கள் வரிசையில் காத்திருந்தனர்.

இந்நிலையில், நேற்று முன் தினம் முகவர்களால் லொறியில் கொண்டுவரப்பட்ட 250 எரிவாயுக்களை வரிசையில் காத்திருந்தவர்களுக்கு வழங்கி முடித்தனர். எனினும், வரிசையில் காத்திருந்த ஏனையவர்கள் எரிவாயுவை பெறாத நிலையில் எரிவாயு தந்தால்தான் லொறி இங்கிருந்து செல்ல அனுமதிக்க முடியுமென ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



இதனையடுத்து அங்கு வந்த பொலிஸாரிடம், ஆர்ப்பாட்டகாரர்கள் எரிவாயு தரப்படும் வரிசையில் காத்திருந்தவர்களுக்கு இலக்கம் வழங்குமாறும் கோரி லொறியை செல்லவிடாது சுற்றிவளைத்து இருந்தனர்.

இதனை தொடர்ந்து பொலிஸார் எரிவாயு முகவருடன் கலந்துரையாடி, புதன்கிழமை எரிவாயு தருவதாகவும் அதற்காக வரிசையில் நிறப்பவர்களுக்கு இலக்கங்கள் முகவர்களால் தரப்படுமென உறுதியளித்ததையடுத்து லொறியை அங்கிருந்து செல்ல ஆர்ப்பாட்டகாரர்கள் அனுமதியளித்தனர். (அ)

# கடல் வழியாக தப்ப முயன்ற 67 பேர் திருமலையில் கைது!

திருமலை, மே. 25

சட்டவிரோதமான முறையில் கடல் வழியாக தப்பிச் செல்ல முயன்ற 67 பேர் திருகோணமலையில் வைத்துக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சாம்பல்தீவு மற்றும் திருகோணமலை கடற்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது 30 முதல் 40 வயதுடைய 12 ஆண்கள் கைது செய்யப்பட்டதோடு அவர்களிடம் இருந்து இரண்டு ஒட்டோக்கள், ஒரு கப் மற்றும் ஒரு வான் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனை அடுத்து சந்தேகத்திற்கிடமான முறையில் பல நாட்களாக இருந்த மீன்பிடி இழுவைப் படகு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

இதில் 45 ஆண்கள், 07 பெண்கள் மற்றும் 03 குழந்தைகள் உட்பட 03 முதல் 53 வயதுக்குட்பட்ட 55 பேரை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

இவர்கள் யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, புத்தளம், அம்பாறை, இரத்தினபுரி, கம்பஹா மற்றும் கொழும்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)



# ஈரானில் 10 மாடிக் கட்டடம் இடிந்து விழுந்து ஐவர் பலி!

தெஹ்ரான், மே. 25

ஈரான் தெற்கு நகரமான அபாடானில் 10 மாடி கட்டடம் பகுதியளவில் நேற்று முன் தினம் இடிந்து விழுந்ததில் 5 பேர் பலியாகினர். 27 பேர் காயமடைந்தனர். அத்துடன், சுமார் 80 பேர் வரையில் இடிபாடுகளுக்கு அடியில் சிக்கிய நிலையில் அவர்களை மீட்க மீட்புக் குழுவினர் போராடி வருகின்றனர்.

ஈராக்கின் எல்லைக்கு அருகில் உள்ள அமீர் கபீர் தெருவில் உள்ள மாடிக் கட்டடமே இடிந்து விழுந்ததாக ஈரான் செய்திச் சேவையான மெஹர் தெரிவித்துள்ளது.

மீட்பு நடவடிக்கைக்கு உதவ ஏனைய நகரங்களில் இருந்து அவசர குழுக்கள் அனுப்பப்பட்டு வருவதாகவும், இரண்டு மோப்ப நாய்கள், ஒரு ஹெலிகொப்டர் மற்றும் ஏழு மீட்பு வாகனங்கள் ஏற்கனவே சம்பவ இடத்தில் இருப்பதாகவும் மெஹர் செய்திச் சேவை குறிப்பிட்டுள்ளது.

கட்டடம் இடிந்து விழுந்ததை அடுத்து அந்தப் பகுதியில் கூடிய குடியிருப்பாளர்கள் நகர அதிகாரிகளுக்கு எதிராக கோஷம் எழுப்பினர்.

கட்டடம் இடிந்து விழுந்தது குறித்து உடனடி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் கட்டட உரிமையாளர் மற்றும் அதைக் கட்டிய ஒப்பந்ததாரர் ஆகியோர் கைது செய்யப்பட்டதாக அரச தொலைக்காட்சி தெரிவித்துள்ளது. (அ)

# குரங்கம்மை நோயை கட்டுப்படுத்த முடியும்!

## உலக சுகாதார அமைப்பு அறிவிப்பு

ஜெனிவா, மே. 25

ஆபிரிக்காவுக்கு வெளியே பொதுவாக கண்டறியப்படாத நாடுகளில் குரங்கம்மையை கட்டுப்படுத்தலாம் என்று உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்த அம்மை நோய் ஆபிரிக்காவுக்கு வெளியே ஐரோப்பா, அமெரிக்கா மற்றும் அவுஸ்திரேலியா உட்பட்ட 14 நாடுகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த எண்ணிக்கை இன்னும் உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது,

எனினும் மக்கள் மத்தியில் ஒட்டுமொத்த ஆபத்து மிகக் குறைவு என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.



மத்திய மற்றும் மேற்கு ஆபிரிக்காவின் தொலைதூரப் பகுதிகளில் இந்த வைரஸ் மிகவும் பொதுவானது என்று நிபுணர்கள் கண்டறிந்துள்ளனர்.

இந்நிலையில் குறித்த நோயை பரவல் இல்லாத நாடுகளுக்கு பரவுவதை தடுக்க முடியும் என்று உலக சுகாதார அமைப்பின் முன் னணி நிபுணர் மரியா வான் கேர் கோவ் தெரிவித்துள்ளார்.

50 ஆண்டுகளில் ஆபிரிக்காவுக்கு வெளியே மிகப்பெரிய வெடிப்பு இருந்தபோதிலும், குரங்கு பாக்ஸ் மக்களிடையே எளிதில் பரவாது, மேலும் இந்த அச்சுறுத் தல் கொரோனா வைரஸ் தொற்று நோயுடன் ஒப்பிட முடியாது என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

இந்த நோய் தோலில் இருந்து தோலுக்கான தொடர்பு மூலமே பரவுகிறது.

அத்துடன் இந்த நோய்க்கான வைரஸ்கள் பிறழ்வதற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை என்றும் உலக சுகாதார அமைப்பின் முன்னணி நிபுணர் மரியா வான் கேர்கோவ் குறிப்பிட்டுள்ளார். (அ)

# உலகெங்கும் அகதிகளாக்கப்பட்டோர் எண்ணிக்கை 100 மில்லியனை கடந்தது

ஜெனிவா, மே. 25

மோதல்கள், வன்முறை, மனித உரிமை மீறல்கள், துன்புறுத்தல்கள் உள்ளிட்ட காரணிகளால் உலகம் முழுவதும் சுமார் 100 மில்லியனுக்கு அதிகமான மக்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளதாக அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் தெரிவித்துள்ளது.



100 மில்லியன் பேர் அகதிகளாக இடம் பெயர்ந்துள்ளனர் என்பது மிகப் பெரிய நெருக்கடியாகும். இந்நிலையில் இடப்பெயர்வுகளுக்குக் காரணமான மோதல்களுக்குத் தீர்வு காணவும், துன்புறுத்தல்களை முடிவுக்குக் கொண்டுவரவும், அப்பாவி மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறுவதற்கு காரணமான பிரச்னைகளைத் தீர்க்கவும் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் எனவும் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் நேற்று முன் தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'எத்தியோப்பியா, புர்கினோ பாசோ, மியான்மர், நைஜீரியா, ஆப்கானிஸ்தான், கொங்கோ ஆகிய நாடுகளில் நடைபெற்று வரும் புதிய வன்முறை அல்லது மோதல்களால் அகதிகள் எண்ணிக்கை அதிகரித்து, உலகம் முழுவதும் அகதிகளாக இடம் பெயர்ந்தோர் எண்ணிக்கை 2021 ஆம் ஆண்டு இறுதியில் 90 மில்லியனாக இருந்தது.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் போர் தொடங்கியதிலிருந்து 60 இலட்சம் பேர் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர். 80 இலட்சம் பேர் உள்நாட்டிலேயே இடம்பெயர்ந்துள்ளனர். இந்நிலையில் அகதிகளின் எண்ணிக்கை 100 மில்லியனைக் கடந்துள்ளது.

100 மில்லியன் அகதிகள் என்பது உலக மக்கள் தொகையில் ஒரு சதவீதத்துக்கும் அதிகமாகும். அகதிகள் பிரச்னைக்கு முற்றுப்புள்ளி வைக்க அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையே தீர்வாகும் என அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# குவாட் உச்சி மாநாடு நேற்று ரோக்கியோவில் தொடக்கம்!

## உக்ரைன் விவகாரம், காலநிலை குறித்து அதிக கரிசனை

ரோக்கியோ, மே. 25

இந்தியா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளை உறுப்பினர்களாக கொண்ட குவாட் உச்சி மாநாடு ஜப்பானில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

இரண்டாவது குவாட் உச்சி மாநாட்டில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், இந்திய பிரதமர் நரேந்திர மோடி, அவுஸ்திரேலிய பிரதமர் அந்தோனி அல்பானீஸ், ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடா ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.

நேற்று காலை குவாட் உச்சிமாநாட்டில் தனது தொடக்க உரையை ஆற்றிய ஜப்பானிய பிரதமர் புமியோ கிஷிடா ஏனைய மூன்று தலைவர்களையும் வரவேற்றார். அவரது தொடக்க உரையில் முக்கிய விவகாரமாக உக்ரைன் மீதான ரஷ்ய படையெடுப்பு அமைந்திருந்தது.

சர்வதேச சட்ட ஒழுங்குகளை மதிக்காமல் உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்துள்ளதாக அவர் குற்றஞ்சாட்டினார்.

உக்ரைன் மீதான ரஷ்ய படையெடுப்பு ஐ.நா. சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கொள்கைகளுக்கு முற்றிலும் சவால் விடும் வகையில் அமைந்துள்ளது. இந்தோ-பசிபிக் பகுதியில் இதுபோன்ற ஒரு சம்பவம் நடக்க நாம் ஒரு போதும் அனுமதிக்கக்கூடாது எனவும் புமியோ கிஷிடா குறிப்பிட்டார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனும் தனது தொடக்க உரையில் ரஷ்யாவின் படையெடுப்பை கண்டித்துக் கருத்து வெளியிட்டார். உக்ரைனுக்கான அமெரிக்க ஆதரவு தொடரும் எனவும் அவர் உறுதியளித்தார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைப் பொறுத்தவரை அவர் உக்ரைன் மீதான ரஷ்ய படையெடுப்பை இதுவரை நேரடியாக கண்டிக்கவில்லை. ரஷ்யா மீதான பொருளாதார தடைகளை அவர் எதிர்த்து வருகிறார்.

இந்நிலையில் குவாட் உச்சி மாநாட்டின் தொடக்க உரையில் உக்ரைன் போர் தொடர்பில் நேரடிக் கருத்துக்கள் எதனையும் அவர் வெளியிடவில்லை. மாறாக சர்வதேச நாடுகளின் பரஸ்பர ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை மோடி வலியுறுத்தினார்.

கொவிட் தொற்று நோயால் உலகம் கடுமையாகப் பாதிக்கப்பட்ட நிலையில் தடுப்பூசி விநியோகம், காலநிலை நடவடிக்கை, விநியோக சங்கிலி பின்னடைவு, பேரழிவு மீட்பு மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு போன்ற பல பகுதிகளில் பரஸ்பர ஒருங்கிணைப்பை நாங்கள் அதிகரித்துள்ளோம் என்று அவர் கூறினார்.

அவுஸ்திரேலியாவின் புதிய பிரதமராக பொறுப்பேற்றுள்ள அந்தோனி அல்பானீஸ் காலநிலை மாற்றம் அதனைத் தடுக்க உலகம் ஒன்றிணைந்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அதிக கரிசனையை குவாட் உச்சிமாநாட்டின் நேற்றைய தொடக்க உரையில் வலியுறுத்தினார்.

புதிய அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் முன்னுரிமைகள் குவாட் நிகழ்ச்சி நிரலுடன் ஒத்துப்போகின்றன. காலநிலை மாற்றத்தைச் சமாளிக்க வலுவான நடவடிக்கை எடுப்பது அவசியம் என அவர் வலியுறுத்தினார்.

அத்துடன், வலுவான இந்தோ-பசிபிக் பிராந்தியத்தை உறுதி செய்வதன் அவசியம் எனவும் அவர் தெரிவித்தார்.

பசிபிக் தீவு நாடுகளுக்கு பருவநிலை மாற்றம் முக்கிய பொருளாதார மற்றும் பாதுகாப்பு சவாலாக உள்ளது என்பதை உணர்ந்து செயல்படுவோம் எனத் தெரிவித்த அவுஸ்திரேலியாவின் புதிய பிரதமர் அந்தோனி அல்பானீஸ், தனது அரசாங்கத்தின் கீழ், ஆஸ்திரேலியா 2030 ஆம் ஆண்டுக்குள் கரியமில வாயு உமிழ்வை 43% குறைக்க ஒரு புதிய இலக்கை நிர்ணயித்துள்ளதாக கூறினார்.

2050 -ஆம் ஆண்டுக்குள் நிகர கரியமில வாயு உமிழ்வை பூச்சிய நிலைக்கு கட்டுப்படுத்துவதே தமது இலக்கு எனவும் அந்தோனி அல்பானீஸ் குறிப்பிட்டார். (அ)

# ரஷ்ய இராணுவச் சிப்பாய்க்கு உக்ரைனில் ஆயுள் தண்டனை

கீவ், மே. 25

போர்க்குற்றவாளியாக கைது செய்யப்பட்ட ரஷ்ய இராணுவ வீரருக்கு உக்ரைனில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு ஐரோப்பிய நாடான உக்ரைன் மீது, ரஷ்யா போர் தொடுத்து கடும் தாக்குதல் நடத்தி வருகிறது. இந்தப் போரில் ரஷ்ய இராணுவ வீரர் வாடிம் ஷிஷிமரின், உக்ரைனை சேர்ந்த 62 வயது மூதாட்டியை சுட்டுக் கொன்றார்.

இதேபோல், உக்ரைன் நாட்டு பொதுமக்களில் ஒருவரையும் தலையில் சுட்டுக் கொலை செய்தார். இதையடுத்து, அவர் போர்க்குற்றவாளியாக கைது செய்யப்பட்டார்.

உக்ரைன் தலைநகர் கீவ் நகரில் நீதிபதிகள் குழு முன், ஷிஷிமரின் ஆஜர்படுத்தப்பட்டார்.

அப்போது, மன அழுத்தத்தில் இருந்ததால் போர் விதிமுறைகளை மீறி இரண்டு பேரை கொலை செய்து விட்டதை ஒப்புக் கொண்ட ஷிஷிமரின், எந்த தண்டனை விதித்தாலும் ஏற்றுக் கொள்வதாக கூறினார். போர்க் குற்றங்களுக்கான முதல் குற்றவாளியாக கைது செய்யப்பட்ட வாடிம் ஷிஷிமரினுக்கு ஆயுள் தண்டனை விதித்து நீதிபதிகள் தீர்ப்பளித்தனர். (அ)

# திமுத் கருணாரத்ன எழுச்சி இலங்கை வலுவான நிலை!

டாக்கா, மே 25

பங்களாதேஷுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் திமுத் கருணாரத்னவின் எழுச்சியான ஆட்டத்தால் இலங்கை வலுவான நிலையை எட்டியுள்ளது.

நேற்று இரண்டாம் நாள் ஆட்டம் முடிவில் 46 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்கள் இழப்புக்கு 143 ஓட்டங்களை இலங்கை அணி பெற்றுள்ளது.

முன்னதாக நேற்று முன்தினம் தொடங்கிய போட்டியில் பங்களாதேஷ் அணி நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடியது. அந்த அணியின் ஆரம்ப வீரர்கள் வேகமாக ஆட்டமிழந்தனர். ஆறாவது விக்கெட்டுக்காக இணைந்த முஸ்பிஹூர் ரஹீம், லிற்றன் டாஸ் இணை சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது.



இந்த இணை, 272 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்றது. இதனால், பங்களாதேஷ் அணி முதல் இனிங்ஸில் சகல விக்கெட்களையும் இழந்து 365 ஓட்டங்களைப் பெற்றது.

முஸ்பிஹூர் ரஹீம் ஆட்டமிழக்காமல் 175 ஓட்டங்களையும், லிற்றன் டாஸ் 141 ஓட்டங்களையும் பெற்றனர்.

இலங்கையின் பந்துவீச்சில் கசுன் ராஜித 5 விக்கெட்களையும், அஸித பெர்னாண்டோ 4 விக்கெட்களையும் இழந்தனர்.

தொடக்கம் கொடுத்த ஒஸத பெர்னாண்டோ - திமுத் கருணாரத்ன இணை சிறந்த ஆரம்பத்தை ஏற்படுத்தியது.

ஒஸத பெர்னாண்டோ 91 பந்துகளில் 57 ஓட்டங்களை எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த குசல் மெண்டிஸ் 11 ஓட்டங்களுடன் வெளியேறினார். மறுமுனையில் அணித் தலைவர் திமுத் கருணாரத்ன சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

இரண்டாம் நாள் ஆட்டம் நேற்று நிறைவுக்கு வந்தபோது, இலங்கை அணி 2 விக்கெட்கள் இழப்புக்கு 143 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

திமுத் கருணாரத்ன 70 ஓட்டங்களுடனும், கசுன் ராஜித ஓட்டம் எதனையும் பெறாமலும் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

ஹூசைன், சகீப் அல் ஹசன் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்களையும் கைப்பற்றினர்.

இன்று போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டமாகும். (ஐ)



## அடுத்த ஐ. பி. எல். தொடரில் பெங்களூரில் நான் இருப்பேன்!

### டிவில்லியர்ஸ் உறுதி

கேப்டவுன், மே 25

அடுத்த ஆண்டு நிச்சயம் நான் ஐ. பி. எல். தொடரில் இருப்பேன் எனத் தெரிவித்துள்ளார் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியின் முன்னாள் வீரர் டிவில்லியர்ஸ்.

தென்னாபிரிக்க அணியின் முன்னாள் கிரிக்கெட் வீரரான டிவில்லியர்ஸ், மொத்தம் 184 ஐ. பி. எல். போட்டிகளில் விளையாடியுள்ளார். இதில் பெங்களூர் அணிக்காக மட்டும் அவர் 156 போட்டிகளில் விளையாடி உள்ளார்.

2011 முதல் 2021 வரையில் பெங்களூர் அணியில் அவர் இடம்பெற்றிருந்தார். நடப்பு தொடரில் அவர் விளையாடப் போவதில்லை என முன்னதாகவே தெரிவித்திருந்தார். இந்நிலையில், அடுத்த தொடரில் தனது வருகை குறித்து பேசியுள்ளார் டிவில்லியர்ஸ்.

"அடுத்த தொடரில் நான் நிச்சயம் இருப்பேன். ஆனால் அது எப்படி என்பதை இன்னும் உறுதி செய்யவில்லை. இதனை விராட் கோலி உறுதிப்படுத்தியதில் எனக்கு மகிழ்ச்சி. வரும் தொடரில் பெங்களூரில் சில போட்டிகள் இருக்கும். அதனால் எனது இரண்டாவது வீட்டுக்கு திரும்புவதில் எனக்கு மகிழ்ச்சி. சின்னசாமி கிரிக்கெட் மைதானம் முழுவதும் ரசிகர்களால் நிரம்பி வழியும் அந்த காட்சியை காண நாம் மிகவும் ஆர்வமாக உள்ளோம். அணியில் மீண்டும் இணைவதை நான் மிகவும் விரும்புகிறேன். அந்த நாளை ஆவலுடன் எதிர்பார்த்தும் உள்ளோம்" என தெரிவித்துள்ளார் டிவில்லியர்ஸ்.

முன்னதாக, பேட்டி ஒன்றில் அடுத்த தொடரில் டிவில்லியர்ஸ் அணியில் இருப்பார் என சொல்லி இருந்தார் விராட் கோலி என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)



## பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் ஒஸாகா அதிர்ச்சி தோல்வி

பாரிஸ், மே 25

பிரெஞ்சு ஒப்பன் ரென்னிஸின் முதல் சுற்றிலேயே அதிர்ச்சி தோல்வியடைந்து ஜப்பானின் நயோமி ஒஸாகா வெளியேறினார்.

கிராண்ட்ஸ்லம் போட்டிகளில் ஒன்றான பிரெஞ்சு ஒபன் ரென்னிஸ் போட்டி பிரான்ஸின் தலைநகர் பாரிஸில் நடக்கிறது.

இதில் நேற்று நடந்த போட்டியில்,பெண்கள் ஒற்றையர் பிரிவின் முதல் சுற்றில் பிரபல வீராங்கனையான ஜப்பானின் நயோமி ஒஸாகா, அமெரிக்காவின் அமெண்டா அனிசிமோவாவை எதிர்கொண்டார்.

இதில் நயோமி ஒஸாகா 5-7, 4-6 என்ற நேர் செட்களில் அனிசிமோவாவிடம் தோல்வி அடைந்து, தொடரில் இருந்து வெளியேறினார். (ஐ)



## ஒழுக்க விதியை மீறியமைக்காக மிஷார மீள அழைக்கப்பட்டார்!

கொழும்பு, மே 25

பங்களாதேஷ் பயணமான இலங்கை கிரிக்கெட் குழாத்தில் இடம்பெற்ற காமில் மிஷார ஒழுக்க விதிகளை மீறியமையால் அவரை நாட்டுக்கு திருப்பி அழைக்க இலங்கை கிரிக்கெட் சபை தீர்மானித்துள்ளது.

சுற்றுப்பயண ஒப்பந்தத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள 1 (ஜே) இலக்க ஒழுக்க விதியை மீறியமைக் காகவே மிஷாரவை மீளழைக்க தீர்மானித்ததாக இலங்கை கிரிக்கெட் நிறுவனம் தெரிவித்தது.

இதற்கு அமைய பங்களாதேஷிலிருந்து அவர் உடனடியாக நாடு திரும்புவுள்ளார்.

இலங்கை - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடருக்கான 18 வீரர்கள் அடங்கிய குழாத்தில் மிஷார இடம்பெற்ற போதிலும் 2 டெஸ்ட்களிலும் வாய்ப்பு கிடைக்கவில்லை.

அவர் நாடு திரும்பியதும் ஒழுக்க விதிகளை மீறயமை தொடர்பாக அவரிடம் விரிவான விசாரணை நடத்தப்படவுள்ளது.

விசாரணையில் வெளியாகும் விடயங்களின் அடிப்படையில் இலங்கை கிரிக்கெட் மேலதிக நடவடிக்கையை எடுக்கும். (ஐ)

## சுரேஷ் ரெய்னா போன்ற வீரரை சென்னை கண்டுபிடிக்க வேண்டும்!

சென்னை, மே 25

ஐ. பி. எல். தொடரின் இறுதி சுற்று போட்டிகள் நேற்று ஆரம்பமானது. இந்தச் சுற்றுக்கு தகுதி பெறாமலே சென்னை அணி வெளியேறியது. சென்னை அணி இறுதிச் சுற்றுக்கு தகுதி பெறாத 2 ஆண்டுகளிலும் சென்னை அணியின் நட்சத்திர வீரராக விளங்கிய சுரேஷ் ரெய்னா விளையாடவில்லை.

2008 ஆம் ஆண்டு முதல் சென்னை அணியின் மகத்தான வெற்றிக்கு ரெய்னா பெரும் பங்களிப்பை வழங்கி வந்துள்ளார். அதன் பிறகு கடந்த ஆண்டு சென்னை அணிக்காக அவர் பெரிய அளவில் ஓட்டங்களை குவிக்காததால் அவரை சென்னை அணி ஏலத்தில் எடுக்கவில்லை.

இந்த நிலையில் சென்னை அணி ரெய்னா போன்ற வீரரை கண்டுபிடிக்க வேண்டும் என இந்திய அணியின் முன்னாள் பயிற்சியாளர் ரவி சாஸ்திரி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில், "சென்னை பல ஆண்டுகளாக சிறப்பாக செயல்பட்டு வருகிறது. ஆனால், சுரேஷ் ரெய்னாவின் பங்களிப்பை நாம் மறந்து விடுகிறோம். சென்னை அணிக்காக 3ஆவது இடத்தில் துடுப்பெடுத்தாடியபோது தொடர்ந்து ஓட்டங்களை குவித்து அவர் அணிக்கு ஸ்திரத்தன்மையை அளித்து வந்தார். அவர் அணியின் மற்ற துடுப்பாட்ட வீரர்களுக்கு விடயங்களை எளிதாக்கினார். அத்தகைய வீரரை சென்னை அணி கண்டுபிடிக்க வேண்டும்" என்றார்.



# மண்ணெண்ணெயின் விலையும் உயரலாம்?

கொழும்பு, மே 25

**மண்ணெண்ணெயின் விலையும் அதிகரிக்கப்படலாம் என தெரிவிக்கப்படுகின்றது. மானிய விலையில் மண்ணெண்ணெய் விற்பனை செய்வதால் அரசாங்கத்துக்கு பாரிய நஷ்டம் ஏற்படுவதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சரான கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.**

நேற்று அதிகாலை 3 மணி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் எரிபொருள் விலையில் திருத்தம் செய்யப்பட்டிருந்தது.

அதன்படி, நாட்டின் வரலாற்றில் முதல்முறையாக அனைத்து வகையான எரிபொருட்களின் விலைகளும் ரூ.400ஐ தாண்டியுள்ளது.

எனினும், ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 87 ரூபாவாக தொடர்ந்து விற்பனை செய்யப்படுவதாகவும், அரசாங்கம் பயன்படுத்தும் விலைச்சூத்திரத்தின்படி, மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றுக்கு 275 ரூபாவாக அதிகரிக்கப்படவேண்டும் என அமைச்சர் கஞ்சன விஜேசேகர கூறினார். (அ)

## விலைச்சூத்திரத்தின் அடிப்படையில் எரிபொருள் விலைகளில் திருத்தம்!

### அமைச்சர் காஞ்சன விளக்கம்



கொழும்பு, மே 25

எரிபொருள் விலைகள் தொடர்பான விலைச்சூத்திரத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விலைச்சூத்திரத்தின் அடிப்படையில் எரிபொருள் விலைகளில் திருத்தம் செய்யப்பட்டுள்ளதாக எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

குறித்த விலைச்சூத்திரத்தில் எரிபொருள் இறக்குமதி செலவுகள், தரையிறக்கும் செலவுகள், விநியோகச் செலவுகள் மற்றும் வரி செலவுகள் ஆகியவை உள்ளடங்குவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, இந்த விலைச் சூத்திரத்தில் வருமானம் உள்ளடக்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

நேற்று அதிகாலை 03 மணி முதல் அமுலாகும் வகையில் எரிபொருட்களின் விலை மீண்டும் அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## இந்திய வங்கியிடம் 500 மில்லியன் டொலர் கடன் பெறுவதற்கு அமைச்சரவை ஒப்புதல்

கொழும்பு, மே 25

இந்தியாவிடம் இருந்து எரிபொருளை வாங்குவதற்கு இந்திய ஏற்றுமதி இறக்குமதி வங்கி மூலம் 500 மில்லியன் அமெரிக்க டொலர் கடனைப் பெறுவதற்கு முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இலங்கை கடும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள நிலையில் எரிபொருட்களுக்குப் பெரும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. டொலர் கையிருப்பு இல்லாததால் எரிபொருட்களை இறக்குமதி செய்வதிலும் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே இந்தியாவிடம் இருந்து எரிபொருட்களை கொள்வனவு செய்யும் நோக்கில் இந்திய எக் சிம் வங்கியிடம் இருந்து 500 மில்லியன் டொலர் கடன் பெறும் யோசனை அமைச்சர வையில் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் அதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. (அ)

## மரண அறிவித்தல்



தோற்றம் 31 - 07 - 1933

மறைவு 23 - 05 - 2022

### சின்னத்தம்பி சுப்பிரமணியம்

வயாவிளானைப் பிறப்பிடமாகவும், இந்தியா தமிழ்நாடு மடிப்பாக்கத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சுப்பிரமணியம் அவர் கள் 23.05.2022 திங்கட்கிழமை அன்று இறைபதம் எய்தினார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி பொன்னம்மா தம்பதிகளின் அருமை மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை ஆச்சிமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும்,நீலாம்பிகை அவர்களின் ஆருயிர்க் கணவரும்,வசந்தகுமாரி(தமிழ்நாடு), லிங்கேஸ்வரி (ஜேர்மனி), சந்திரகுமாரி(பிரான்ஸ்), செந்தூர்ச்செல்வன் (ஜேர்மனி), உமாசுதன்(பிரான்ஸ்), லம்போதரன்(ஜேர்மனி) ஆகியோரின் அருமைத் தந்தையும்,காலஞ்சென்றவர்களான கனகராயா, செல்லபாக்கியம், சின்னமணி இராசமணி மற்றும் சிங்காராயா (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரரும்,பரமசிவம்(தமிழ்நாடு), லிங்கேஸ்வரன்(ஜேர்மனி),சந்திரகுமார்(பிரான்ஸ்), ஜீவலங்கா (ஜேர்மனி), சத்தியா(பிரான்ஸ்), காயத்திரி(ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும்,

கஜநிதி, காலஞ்சென்ற தயாநிதி, நிசாந்தினி, ரூபன், துசாந்தி, காதீசன், சஜீசன், துசாந், கயறூபி, சஞ்ஷியா, ஜெனிஷியா, பவிராமன், ஆதிகை, அபூர்னன், ஆதினி, ஆதிகன், அகரன், தமிழாரணி, இலக்கியன் ஆகியோரின் அன்புப் பேரனும்,லைக்கா, பவிஷன், அனுசன், ஆதீசன், அனித், யசிக்கா, டினோயா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விபரம் பின் னர் அறியத்தரப்படும்.

இவ் அறிவித்தலை உற் றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**செந்தூர் - மகன்**

தொடர்புகளுக்கு:
**உமா - மகன்** Mobile : +33652226867
**செந்தூர் - மகன்** Mobile : +4917634629124
**லம்போதரன் - மகன்** Mobile : +4917620005661
**ஜெயா - மகள்** Mobile : +4916092171442



## ஒரு...

ஆரம்பத்தில் வறுமை நிலையிலுள்ள ஒவ்வொரு குடும்பங்களுக்கும் தலா 20 கிலோ அரிசி வீதம் வழங்கத் தீர்மானிக் கப்பட்டிருந்தாலும் அந்த முடிவு மாற்றப் பட்டு அனைத்துக் குடும்பங்களுக்கும் தலா 10 கிலோ அரிசி வழங்க முடிவு செய் யப்பட்டுள்ளது.

தமிழக அரசின் நன்கொடையின் முதற் கட்ட உதவிகள் இலங்கையை வந்தடைந் துள்ளன. அதில் 9 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி, 50 மெற்றிக் தொன் பால்மா, 25 மெற்றிக் தொன் மருந்து என்பன உள்ளன. இவற்றில் அரிசி மற் றும் பால்மா என்பனவற்றை 25 மாவட் டங்களுக்கும் பகிர்ந்தளிப்பது தொடர் பான கலந்துரையாடல் பிரதமரின் செய லர் தலைமையில் நேற்று முன் தினம் மாலை 'சூம்' தொழில் நுட்பத்தின் ஊடாக மாவட்ட செயலர்களுடன் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் இ.தொ.கா. தலைவர் செந்தில் தொண்டமான், உணவுப் பாதுகாப்பு ஆணையாளர் திருமதி கிருஸ்ணமூர்த்தி ஆகியோரும் பங்கேற்றனர்.

நிதி அமைச்சு 25 மாவட்ட செயலர் களுக்கும் முன்னர் அனுப்பிய கடிதத்தில், வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு தலா 20 கிலோ அரிசி வீதம் வழங்கப் பணித்திருந் தது.

ஆனால் நேற்று முன் தினம் நடந்த கலந்துரையாடலில் அந்த முடிவு மாற்றி யமைக்கப்பட்டுள்ளது.

அனைத்து மக்களுக்கும் ஏதோவொரு வகையில் அரிசிக்கான தட்டுப்பாட்டை எதிர்கொள்வதால் ஒவ்வொரு குடும்பத் துக்கும் தலா 10 கிலோ வீதம் அரிசியை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

கிடைக்கப்பெற்றுள்ள 9 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை பங்கிட்டு முன்னுரிமை அடிப்படையில் குடும்பங் கள் தெரிவு செய்யப்பட்டு விநியோகிக் கப்படவுள்ளன. எஞ்சிய 31 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியும் இலங்கைக்கு அடுத்த மாதம் முற்பகுதியில் வரலாம் என்று எதிர்பார்க்கப்படுவதால் அதனை எஞ்சியுள்ள குடும்பங்களுக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட் டும் தாய்மார்கள், 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் உள்ள குடும்பங்களுக்கு பால்மா பைக்கெற்றுகளை வழங்கத் தீர் மானிக்கப்பட்டுள்ளது. அதிலும் தற் போது முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்படும் குடும்பங்களுக்கே வழங்கப்படவுள்ளன.

ஒவ்வொரு மாவட்டத்திலும் எத்தனை குடும்பங்களுக்கு அரிசி, பால்மா வழங்குவது என்பது தொடர்பான இறுதி முடிவு எடுக்கப்படும் என உணவுப் பாது காப்பு ஆணையாளர் திருமதி கிருஸ்ண மூர்த்தி தெரிவித்தார்.

இறுதி முடிவு எடுக்கப்பட்டதும் மாவட்டங்களுக்கான விநியோகம் உட னடியாக ஆரம்பிக்கப்படும். யாழ்ப்பா ணம் உள்ளிட்ட வடபகுதிக்கான விநி யோகம் ரயில் மார்க்கம் ஊடாக இடம் பெறும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, இந்தப் பொதிகளை ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் எடுத் துச் செல்வதற்கான போக்குவரத்து, அதனை ஏற்றி இறக்குவதற்கான கூலி என்பனவற்றுக்கான செலவுகளை அந் தந்த மாவட்டச் செயலகங்களே பொறுப் பேற்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட் டுள்ளது.

அரசாங்கத்தால் எந்தவொரு நிதியுத வியும் அதற்கு வழங்கப்படாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் மாவட்ட செயலகங்கள், நன்கொடை யாளர்களின் உதவிகளை நாடுவதற்கு முடிவு செய்துள்ளன. (அ)

## முறையாக...

விதந்துரை வழங்கியுள்ளது.

மருந்து வழங்கல் பிரிவுக்குச் சொந்த மான களஞ்சியங்களில் வெப்பநிலையை முறையாகப் பேணி வராமை மற்றும் மருந்துவ வழங்கல்கள் மத்திய ஔடத களஞ்சியத்தினதும் வைத்தியசாலைகளி னதும் நடைகூடங்களில் வைக்கப்பட் டுள்ளமையையும் குழு அவதானித்துள் ளது.

மருந்துகள் கிடைத்தவுடன் அவை தரமற்றவையென அடையாளம் காண் பதற்கான முறையியலொன்று காணப் படின் அதற்கான நட்டத்தை வழங்குநர் களின் உத்தரவாதத் தொகையிலிருந்து அறவிட்டுக் கொள்ள முடியுமெனவும், அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் மூல மாக 60 வகையான மருந்துகளின் தரத் தைப் பரிசோதனை செய்ய முடிந்தால் இந்த நிலைமையை ஓரளவுக்கேனும் தவிர்த்துக் கொள்ள முடியும் என அமைச் சின் செயலாளர் சுட்டிக்காட்டினார்.

மருத்துவ வழங்கல் பிரிவானது தர மற்ற மருந்துகள் அல்லது மருத்துவ வழங்கல்களுக்கான செலவுகளை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்திடமிருந்து அறவிடுவதற்குப் பதிலாக உரிய வழங்கு நர்களிடமிருந்து அறவிட்டுக் கொள் வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண் டும் என்றும் செயலாளருக்குப் பரிந்து ரைக்கப்பட்டது.

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத் தொடருக்கான அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் அறிக்கையை அதன் தலைவர் கௌரவ (பேராசிரியர்) திஸ்ஸ விதாரண கடந்த 20ஆம் திகதி சமர்ப்பித்திருந்தார். அந்த அறிக்கையிலேயே இந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

2021.08.04 தொடக்கம் 2021.11.19 வரையான காலப்பகுதியில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவால் விசார ணைக்கு உட்படுத்தப்பட்ட நிறுவனங் கள் குறித்த விடயங்கள் இந்த அறிக்கை யில் உள்ளடக்கப்பட்டுள்ளன. (ஐ)

## 21 ஐ...

கலைத்து தேர்தல் நடத்துவது தொடர் பாக பிரதமர் ரணில் தலைமையிலான அரசு பேச்சு நடத்தி வருவதாக நம்பத்த குந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தேர்தலை எதிர்கொள்வதற்கு பொருத்த மான சூழ்நிலை இல்லாதுவிட்டாலும் மக்களின் விருப்பங்களை நிறைவேற்ற முடியாது விட்டால் அரசைத் தொடர் வதில் அர்த்தமில்லை என்று அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பாக அரசின் பலம் வாய்ந்த அமைச்சர் ஒருவரிடம் எமது இணையத்தளம் தொடர்பு கொண்டு கேட்டபோது அவர் தெரிவித்துள்ளதாவது:

தேர்தலுக்கு செல்வது தொடர்பாக இறுதி முடிவு எடுக்கப்படாதபோதிலும், உள்நாட்டில் அரசு இது தொடர்பான கலந்துரையாடலை ஆரம்பித்துள்ளது.

பிரதிச் சபாநாயகர் நியமனம் தெரி வில் மற்றும் 21 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பாக பொதுஜன பெரமுனவின் நடவடிக்கைகள் திருப்திகரமானதாக இல்லை.

இந்நிலையில் 21 ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு நாம் கடுமையாக உழைத்து வருகின்றோம். அது தோல்வியடைந்தால் தேர்தலுக்குச் செல்வதனை தவிர வேறு வழியில்லை.

நாட்டின் தற்போதைய காலகட்டத் தில் தேர்தலுக்கு செல்வதற்கான சரியான நேரம் இல்லாது விட்டாலும், மாற்று வழிகளில் கவனம் செலுத்த வேண்டும்.

21 ஆவது திருத்தத்தினை நிறை வேற்றுவதற்கு முன்னுரிமை வழங்க வேண்டும். எரிவாயு, எரிபொருள் மற் றும் பிற அத்தியாவசிய பொருட்களை விரைவாக வழங்குதல் மற்றும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் சில அடிப் படை பிரச்னைகளுக்கு தீர்வாக அமை யும்-என்றார் அவர்.

ஆனால்,

இப்போது தேர்தலுக்கு போக முடி யாது. 2023 பெப்ரவரி மாதமே ஜனாதிபதி யால் பாராளுமன்றை கலைக்க முடியும்.

பாராளுமன்றம் தன்னைத்தானே கலைப்பது என்றாலும், இப்படி நிலைமை யில் பொதுஜன பெரமுன அதற்கு விடாது என்று ஊகிக்கலாம். (அ)

## மிகமோசமான...

கொழும்பில் ஊடகவியலாளர்களை சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரி வித்தார்.

தொழில்துறைகள் தமது செயல்பாடு களை முன்னெடுக்க முடியாத நிலை உரு வாகியுள்ளன. போதியளவு மூலப் பொருட் கள் கையிருப்பில் இல்லை. சுதந்திரத்துக்கு பின்னர் இலங்கை இவ்வாறானதொரு நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது.

அடுத்த சில ஆண்டுகளில் 600 கோடி டொலர்களை வெளிநாட்டு கடனாக செலுத்த வேண்டியுள்ளது. இதேவேளை, இரு வாரங்களுக்கு போதுமான இறக்கு மதி செலவினங்களே உள்ளன.

முன்மொழியப்பட்ட கடன் கொடுப் பனவுகளால் இந்த ஆண்டில் 250 கோடி டொலர்கள் முதல் 300 கோடி டொலர் கள் வரை சேமிக்க முடியும். ஆனால், ஆறு மாதங்களில் கடனாளிகளுடன் கலந்தாலோசித்த பின்னர் ஒத்திவைத்த பணம் செலுத்தும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

நாட்டின் பணவீக்கம் அடுத்த 12 மாதங் களில் 30-40 வீதமாக உயரும். நாட்டில் பொருளாதார நெருக்கடியின் காரணமாக அரசியல் நெருக்கடி மற்றும் சமூக அமைதி யற்ற நிலை போன்றன தோற்றுவிக்கப் பட்டுள்ளன. நெருக்கடிகள் காரணமாக வேலை இழப்போரின் எண்ணிக்கை உயர்ந்து வருகின்றது. வரும் நாட்களில் ஏழைகள், நலிந்தவர்களின் நிலைமை மிகவும் மோசமாகும் - என்றார்.

இதேவேளை, கட்சி பேதங்களை மறந்து நீண்டகால பொருளாதார ஸ்தி ரத்தன்மையை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மா னங்களுக்கு, ஒத்துழைப்பு வழங்க வேண் டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள் ளார். நேற்று கோப் குழுவில் முன்னிலை யானபோதே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார். (ஐ)

## எரிபொருள்...

420 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது. லீற் றர் ஒன்றின் விலை 82 ரூபாவால் அதி கரிக்கப்பட்டுள்ளது.

ஒக்ரேன் 95 ரக பெற்றோல் லீற்றர் ஒன் றின் புதிய விற் பனை விலை 450 ரூபாவா கவும், ஒட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் விற்பனை விலை 400 ரூபாவாகவும், சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விற் பனை விலை 445 ரூபாவாகவும் அதிகரிக் கப்பட்டுள்ளது. (அ)

## போக்குவரத்து...

வீதத்தால் உயர்த்தப்பட்டுள்ளது என்றும், ஆரம்ப கட்டணம் 32 ரூபாயாக நிர்ண யிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

இந்தக் கட்டண அதிகரிப்பு இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் பேருந்து சேவைகளுக்கு பொருந்தும்.

இதேவேளை, முச்சக்கர வண்டிகளுக் கான கட்டணமும் உயர்ந்துள்ளது. முத லாவது கிலோமீற்றருக்கு 100 ரூபாயும், இரண்டாவது கிலோமீற்றருக்கு 80 ரூபா யும் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் சங்கம் அறிவித் துள்ளது. (ஐ)

## எரிவாயு...

னர் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், லிட்ரோ நிறுவனம் எரிவாயு விநியோ கத்தை நிறுத்துமாறு நேற்று முன்தினம் அறிவித்திருந்தது.

இந்நிலையில், முன்னைய அறிவிப்பை நம்பி யாழ்ப்பாண நகர பலநோக்கு கூட் டுறவு சங்கத்தில் பொதுமக்கள் கூடினர். நீண்டநேரமாகியும் எரிவாயு விநியோ கிக்கப்படவில்லை. இதனால், விரக்திய டைந்த மக்கள் காங்கேசன்துறை வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால், சிறிதுநேரம் காங்கேசன் துறை வீதியூடான போக்குவரத்து தடைப்பட்டதுடன், குழப்பநிலையும் உருவானது. இதையடுத்து அந்தப் பகு திக்கு வந்த விசேட அதிரடிப் படையின ரும், பொலிஸாரும் மக்களை சமரசப்படுத்தி அங்கிருந்து கலையச் செய்தனர்.

எனினும், கொட்டடியில் அமைந் துள்ள எரிவாயு களஞ்சியசாலையில் கூடிய மக்கள் அங்கிருக்கும் எரிவாயுவை விநியோகிக்குமாறு கோரி ஆர்ப்பாட் டம் செய்தனர். இதைத் தொடர்ந்து மேலதிகமாக மக்களை கூடவிடாது தடுத்த பொலிஸார் இருந்த எரிவாயு சிலிண்டர்களை விநியோகித்தனர்.

இதேவேளை, திருநெல்வேலியில் அமைந்துள்ள நல்லூர் பல நோக்கு கூட் டுறவு சங்கத்தில் எரிவாயு வழங்கப்படவி ருந்த நிலையில் பிரதேச செயலரின் தலை யீட்டால் விநியோகம் நிறுத்தப்பட்டது. இதையடுத்து அந்தப் பகுதியில் குழப்ப மும் பதற்றமும் ஏற்பட்டது. கோப்பாய் பொலிஸாரின் தலையீட்டால் மக்கள் சமரசமாகி அங்கிருந்து சென்றனர். இதே போன்று, பரமேஸ்வரா சந்தியிலும் எரி வாயுவை விநியோகிக்கக் கோரி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ஐ-3)

(தொடர்புடைய செய்தி பக்கம் 5இல்)

## 21இல்...

உள்ளிட்ட விடயங்களை மையப்படுத்தி ஐக்கிய மக்கள் சக்தி முன்வைத்துள்ள 21 ஆவது திருத்தச் சட்டமூலத்தை நிறை வேற்ற வேண்டும் என்றும் கூறினார். (ஐ)

## இந்தியாவுக்கு...

யாடலும் நடைபெற்றதாகத் தெரிய வில்லை. அவ்வாறு கச்சதீவை இந்தி யாவுக்கு வழங்கக்கூடிய சூழ்நிலை ஏற் படாது.

மேலும், மீனவர்களுடைய பிரச்னை இயன்றளவு தீர்ப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்படும். மேலும் வட மாகாண மீனவர்களுக்கு இந்திய மீனவர்களின் இழுவை படகுகளின் அத்துமீறிய மீன் பிடி மற்றும் சட்டவிரோத செயல்பாடு கள் காரணமாக வளங்கள் அழிக்கப்படு தல் போன்றவை பெரும் பிரச்னைகளா கக் காணப்படுகின்றன. அத்துடன், கடற் றொழிலாளர்களுடைய தொழில் உபகர ணங்கள் அழிக்கப்படுகின்றன. இந்தப் பிரச்னைக்கு ஓரளவு தீர்வு கண்டு வருகின் றோம். அதேபோன்று எரிபொருள் பிரச் னைக்கு தீர்வும் எட்டப்படவுள்ளதாக தெரிவித்தார். (ஐ)

## உணவுகள்...

எரிபொருள் விலையேற்றம் காரண மாக கொத்து ரொட்டி, பிறைட் றைஸ், மற்றும் உணவுப் பொதிகளின் விலைகள் 10 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளன.

எனினும், ஏனைய உணவுப் பொருட் களின் விலைகள் அதிகரிக்கப்படவில்லை என்று அந்த சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார். (ஐ)

## புலமைப்பரிசில்...

பட்டன. இதில், யாழ்ப்பாணம் மாவட் டத்தில், யாழ்ப்பாணம் இந்தக் கல்லூரி 158 புள்ளிகள், யாழ்ப் பாணம் மத்திய கல்லூரி 155 புள்ளிகள், வேம்படி மகளிர் உயர்தர பெண்கள் பாடசாலை 163 புள்ளி கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, நியாயமான காரணத் துக்காக பாடசாலையை மாற்ற விரும் பும் மாணவர்களுக்கு எதிர்வரும் காலங் களில் இணையம் ஊடாக விண்ணப்பங் களை சமர்ப்பிக்கும் வசதி வழங்கப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

## நிதி...

திருந்தார்.

நிதி அமைச்சை ஏற்க முன்னாள் அமைச்சர் அலி சப்ரியும் மறுத்துவிட்ட நிலையில், ஐக்கிய மக்கள் சக்தியின் எம். பியான கலாநிதி ஹர்ஷ டி சில்வாவும் நிதியமைச்சை பொறுப்பேற்க விடுக்கப் பட்ட அழைப்பை நிராகரித்துள்ளார்.

நிதி அமைச்சு பதவியை எவரும் ஏற் காத நிலையில், பிரதமர் ரணில் விக்கிர மசிங்க அந்த அமைச்சை பொறுப்பேற்க வுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இன்று அல்லது நாளை அவர் நிதி அமைச்சைப் பொறுப்பேற்பார் என்றும் அறிய வருகின்றது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# மீண்டும் நிதியமைச்சராக அலி சப்ரி பதவியேற்பார்?

கொழும்பு, மே 25

**எந்தவொரு அமைச்சுப் பதவியையும் ஏற்கப் போவதில்லை என்று தீர்மானித்திருந்த அலி சப்ரி, இறுதியாக நிதியமைச்சர் பதவியை பொறுப்பேற்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் இணக்கம் தெரிவித்துள்ளதாக அரசுக்கு நெருக்கமான வட்டாரங்கள் உறுதிப்படுத்தியுள்ளன.**

இது தொடர்பாக சிங்கள இணையத்தளம் நேற்று செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஜனாதிபதி மற்றும் அலி சப்ரி ஆகியோருக்கு இடையில் பல நாட்களாக நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் இந்த உடன்படிக்கை எட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

முன்னதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நிதியமைச்சை பொறுப்பேற்றுக்கொள்வதாக தெரிவித்திருந்தபோதிலும், மத்திய வங்கி மற்றும் நிதியமைச்சின் கடும் எதிர்ப்பினால் ஜனாதிபதி அந்த பதவியை அவருக்கு வழங்க நடவ



டிக்கை எடுக்கவில்லை.

மறுபுறம் நிதியமைச்சர் பதவியை பிரதமரிடம் வழங்கக் கூடாது என்பதில் ஜனாதிபதி முன்னரே உறுதியாக இருந்தார்.

இதனையடுத்து, அதனை ஏற்றுக்கொள்ளுமாறு அலி சப்ரியிடம் ஜனாதிபதி பலமுறை கேட்டுக்கொண்டார்.

எவ்வாறாயினும், அரசில் எந்த அமைச்சுப் பதவியையும் ஏற்கக்கூடாது என்று அலி சப்ரியின் குடும்ப உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதன்படி, அமைச்சுப் பதவிகளை ஏற்கவில்லை என்பது மட்டுமன்றி பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகவும் தயார் என்று சப்ரி அண்மையில் பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

எவ்வாறாயினும், அரச தலைவரின் பலமான வேண்டுகோளுக்கு இணங்க அலி சப்ரி இறுதியாக நிதியமைச்சர் பதவியை ஏற்க தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# இலங்கைக்கு உதவிகள் ஐ. நா. பிரதிநிதி உறுதி!

கொழும்பு, மே 25

தற்போதைய பொருளாதார சவால்களை எதிர்கொள்வதற்காக இலங்கைக்கான உதவிகளை வழங்க ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர் உறுதியளித்துள்ளார். வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸை, நேற்றுமுன்தினம் சந்தித்த போது, அவர் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

இதன்போது பல்வேறு முக்கிய விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டன என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)

## மரண அறிவித்தல்


தோற்றம்
22 - 03 - 1979



உதிர்வு
15 - 05 - 2022

**திருமதி செந்தில்வண்ணன் தர்மஜோதி (மைதிலி)**

யாழ். கோப்பாயைப் பிறப்பிடமாகவும், பிரித்தானியா லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட செந்தில் வண்ணன் தர்மஜோதி அவர்கள் 15.05.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், நடராஜா ஜெகதீஸ்வரி(நியூசிலாந்து) தம்பதிகளின் அன்பு மகளும், கைதடி வடக்கைச் சேர்ந்த தனபாலசிங்கம் தவயோகநாயகி தம்பதிகளின் அன்பு மருமகளும்,அப்பாக்குட்டி கந்தையா, ஈஸ்வரி கந்தையா தம்பதிகளின் அன்புப் பெறா மகளும், செந்தில் வண்ணன் (வவா) அவர்களின் அன்பு மனைவியும்,கம்சிகா, மதிரி, தேன்சிகா ஆகியோரின் பாசமிகு தாயாரும்,மயூரதாஸ், மயூரபாலன், மயூரகிரி, கஜேந்திரதாஸ், துஸ்யந்தி, ஜனனி, கோகுலன் ஆகியோரின் பாசமிகு சகோதரி யும், அன்ரோனியா, கிருஷாலினி, ஜெகதீஸ்வரன், சுபேதா, அறிவழகன், கிஜினஸ், டென்சி ஆகியோரின் அன்பு மைத்துனியும்,எரேமிஜா, ஜொலினா, ஜொசியா, பவீன், கேசவி, லேனுஜா, நிதுர்ஜா, அஸ்வித், ஆஜிஷா, ஆகாஷ் ஆகியோரின் அன்பு மாமியும்,மயூரிதன், பத்மபூஜா, அபிராமி, கெருன், கெவின் ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும்,நளாயினி, கார்த்திகா ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரியும்,செந்தில்குமரன், செந்தில் நிதி ஆகியோரின் மைத்துனியும்,தர்மிலன், மகிலன், நிகா, கர்ணி, சந்தோசி ஆகியோரின் அன்புச் சித்தியும், சற்குணராசா, விஜயராசா, குருபானந்தசோதி, சிவ யோகநாதன் ஆகியோரின் அன்பு மருமகளும்,புஷ்பலேகா அவர்களின் பெறாமகளும் ஆவார்.

கிரியை
Wednesday, 25 May 2022 10:00 AM - 12:30 PM
Jack Carter Pavilion Oakfield Playing Fields Fairlop, Fencepiece Rd, Ilford IG6 2JL, United Kingdom

தகனம்
Wednesday, 25 May 2022 1:15 PM
City of London Cemetery & Crematorium Aldersbrook Rd, London E12 5DQ, UK

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**செந்தில்நிதி - மைத்துனர்**
Mobile : +447879306970
**செந்தில்வண்ணன் - கணவர்**
Mobile : +447922700677

தகவல்:
**செந்தில்வண்ணன் - கணவர்**


# புத்தளத்தில் கடும் வெள்ளம் 20,000 பேருக்கு மேல் பாதிப்பு!

## வெள்ளத்துக்கு மத்தியிலும் பரீட்சை எழுதினர் மாணவர்கள்

புத்தளம், மே 25

நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை முதல் பெய்த கடும் மழை காரணமாக புத்தளம் பிரதேச செயலாளர் பிரிவில் மாத்திரம் 5 ஆயிரத்து 791 குடும்பங்களைச் சேர்ந்த 20 ஆயிரத்து 122 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக புத்தளம் மாவட்ட செயலாளர் எச். எம். எஸ் .பி. ஹேரத் தெரிவித்தார்.

எனினும், இதுவரை பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தற்காலிக முகாம்களில் தங்கவைக்கப்படவில்லை எனவும், பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தத்தமது வீடுகளிலும், உறவினர்கள் வீடுகளிலும் தங்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.அத்துடன், தற்போது நடைபெற்று வரும் சாதாரண தரப் பரீட்சை நிலையங்களில் ஏற்பட்டுள்ள வெள்ளம் காரணமாக 600 மாணவர்கள் பரீட்சை எழுதுவதில் சிரமங்களை எதிர்நோக்கினர்.

எனினும், அவர்கள் பாதுகாப்பான இடத்துக்கு மாற்றப்பட்டு எவ்வித தடங்களுமின்றி பரீட்சைக்கு தோற்றுவதற்கு உரிய ஏற்பாடுகள் செய்துகொடுக்கப் பட்டன என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, புத்தளம் நகர சபைக்கு உட்பட்ட புத்தளம் - மன்னார் வீதி, கடையார்குளம், நூர் நகர் உள்ளிட்ட தாழ்நிலப் பகுதிகளும், புத்தளம் பிரதேச சபைக்கு உட்பட்ட ரத்மல்யாய, அல்காசிமி சிட்டி மற்றும் பாலாவி உள்ளிட்ட பகுதிகளில் உள்ள வீடுகளிலும், வர்த்தக நிலையங்களிலும் வெள்ளநீர் புகுந்தமையினால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.



அத்துடன், புத்தளம் - கொழும்பு பிரதான வீதி மற்றும் புத்தளம் - மன்னார் பிரதான வீதி என்பனவற்றை ஊடறுத்து வெள்ளநீர் பாய்ந்து செல்வதையும் அவதானிக்க முடிகின்றது.

இதேவேளை, புத்தளம் கல்வி வலயத்திற்கு உட்பட்ட சாஹிரா தேசியப் பாடசாலை, புத்தளம் சென். அன்ட்ரூஸ் மத்திய கல்லூரி மற்றும் புத்தளம் இந்து மத்தியக் கல்லூரி என்பனவும் வெள்ளத்தினால் மூழ்கியுள்ளதை அவதானிக்க முடிந்தது.

இதனால், மேற்குறிப்பிட்ட மூன்று பாடசாலைகளிலும் இன்றைய தினம் கல்வி பொதுத்தராதர சாதாரன தரப் பரீட்சைக்கு தோற்ற வருகை தந்த மாணவ மாணவிகள் பலசிரமங்களுக்கு முகம் கொடுத்தனர். (ஐ)

# நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையை சிறுபான்மை தலைவர்களே விரும்பினர்!

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

வவுனியா, மே 25

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை விரும்பியவர்கள் சிறுபான்மை தலைவர்களே என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தெரிவித்தார்.

வவுனியாவில் இடம்பெற்ற கட்சியின் வட்டார அமைப்பாளர்களின் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போது இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

21ஆவது சீர்திருத்தமானது நாட்டின் பாராளுமன்றத்திற்கும் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதிக்கும் இடையிலான அதிகாரங்களை பற்றியதாகும். அந்தவகையில் 13ஆவது சீர்திருத்தமும் 21வது சீர்திருத்தமும் சம்பந்தப்பட்டதல்ல.

ஒரு காலகட்டத்தில் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையை தமிழ் தேசிய தலைவர் அப்பாபிள்ளை அமிர்தலிங்கம், அல்லது மலையக மக்களுடைய தேசிய தலைவர் தொண்டமான், முஸ்லிம் மக்களுடைய அஷ்ரப் ஆகியோர் இருந்த காலகட்டத்தில் இதனை வலியுறுத்தி வந்தனர். அதாவது நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையானது சிறுபான்மை மக்களுக்கு பாதுகாப்பானதாகவும், பயனுள்ளதாகவும் இருக்கும் என கூறியிருந்தனர் - என்றார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 25.05.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றையராசி பலன்
7.15 மணி : கதை வழி அறமொழி
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர்நாடகம்
11.00 மணி : கலக்கல் ஸ்ரார் (மறு ஒளிபரப்பு)

**பகல்**

12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-கண்ணும் கண்ணும் கொள்ளையடித்தால்,மங்காத்தா திரைப்படங்களின் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : டொப் 10 மூவீஸ்-புதிய 10 திரைப்படங்களின் தரவரிசை

**இரவு**

07.00 மணி : பாரதீ - வைத்தியர் தர்சிகா



08.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : துறைக்கு அப்பால்



09.30 மணி: பத்துக்கு 10
10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**

5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு